மலர்-4 இதழ்-99 அக்டோபர் 1-15 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



## கன்றுகட்டும் தறி கூட கடவுளாக மாறும்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

e- book

www.aanmeegamalar.com
e- magazine
e- magazine

## எளிமையான பார்வையில்

# பாடல் பெற்ற தலங்கள்



# மூலிகையால் செய்யப்பட்ட பத்மநாபர்

இந்தியாவில் உள்ள கோவில்களில் இருக்கும் பெரும்பாலான சிலைகள் கற்களாலோ, உலோகத்தாலோ செய்து நிறுவப்பட்டிருக்கும். கேரளக் கோவில்களில் மரங்களினால் கூட சிலைகள் செய்யப்பட்டிருக்கும். ஒரு சில கோவில்களில் மட்டுமே சிலைகள், மூலிகைகளைக் கொண்டு செய்யப்பட்டதாகச் சொல்வார்கள். அனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவிலின் மூலவர் சிலை, 'கடுசர்க்கரா' எனும் எட்டு விதமான (அஷ்டபந்தன) மூலிகை கள் கொண்டு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதனால்தான் இங்குள்ள மூலவர் சிலைக்கு அபிஷேகம் எதுவும் செய்யப்படுவதில்லை.

# பூக்கிணற்றில் புஷ்பங்கள்

திருமலையில் வேங்கடாசலபதி மட்டுமே குடி கொண்டுள்ளார். மற்றைய கடவுளருக்கு எனச் சிற்பமோ, சித்திரமோகூடக் கிடையாது. எனவே, மற்ற தெய்வங்களுக்கு உரித்தான புஷ்பங்கள் அனைத்தும் அவர்களுக்குச் சாத்தப்படும் பாவனை யுடன் வேங்கடாசலபதியின் பாத கமலங்களிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றன.

மற்ற தெய்வங்களுக்கும் சேர்த்துச் சமர்ப்பிக்கப் பட்ட புஷ்பங்களைத் தனது பிரசாதமாக வேங்கடா சலபதி வழங்குவது முறையல்ல என்பதால், அவர் சந்நிதியில் இருக்கும் புஷ்பங்களைப் பக்தர்களுக்கு வழங்குவதில்லை. மாறாக, அவையனைத்தும் கோயிலை ஒட்டியிருக்கும் பூக்கிணற்றில் சேர்க்கப் படுகின்றன. இந்த நியதியை ஏற்படுத்தியவர் ராமாநுஜர்.






# உடல்வலி, தலைவலியை போக்கும் ஆஞ்சநேயர்

திருப்பதி வெங்கடாஜலபதியை பார்க்க திருமலைக்கு செல்லும் மலைப்பாதையில் தலையேறுகுண்டு என்ற பாறை உள்ளது.

இந்தப் பாறையில் ஆஞ்சநேயர் திருவுருவம் பொறிக்கப் பட்டிருக்கிறது. பொதுவாக மலையேறும்போது ஏற்படக்கூடிய தலைவலி, கைகால்வலி, உடல்வலி போன்றவை ஏற்படாமல் இருக்க இந்தப் பாறையில் இருக்கும் ஆஞ்சநேயரைத் தொட்டு வழிபடவேண்டும்.

பெருமாளை தரிசிக்க போகும்போது ஏற்படும் வலிகளை நீக்கி நிம்மதி தருவது இந்த அனுமனின் சேவையாகும்.



# பொன்னேர் உழுதல்

## கம்போடியாவில் இன்றும் கடைபிடிக்கப்படுகிறது

பொன்னேர் உழுதல் என கேள்விப்பட்டு இருப்போம். சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் விவரிக்கபடும் வழக்கபடி முதல் உழவை பொன்னால் ஆன ஏரில் அரசன் உழுவது வழக்கம். அப்போதுதான் மகசூல் நன்றாக விளையும் என நம்பிக்கை.

இராமாயணத்தில் ஜனகர் இப்படி பொன்னேர் பூட்டி உழுகையில் ஏர்முனை பட்டு சீதை கிடைத்ததாக வரலாறு.

இவ்வழக்கம் இன்று இந்தியாவில் இல்லை. ஆனால் தென்கிழக்கு ஆசிய நாடுகள் கம்போடியா, பர்மா, தாய்லாந்து போன்றவற்றில் உள்ளது. கம்போடிய மன்னர் தன் நாட்டில் பொன்னேர் பூட்டி உழும் காட்சி.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

## நம்பிக்கையுடன் வணங்கினால்

# கன்றுகட்டும் தறி கூட கடவுளாக மாறும்

இறைவன் எங்கு இருப்பான், எந்த வடிவத்தில் இருப்பான் என்பதற்கு பல்வேறு விளக்கங்களை மிக அழகாகவும், மிக ஆழமாகவும் இந்து மதம் தெளிவுபடுத்தியுள்ளது.

இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்பதை இரண்யகசிபு மகாராஜாவுக்கு விளக்கிய பெருமாளைப் போன்று, எந்த பொருளையும் கடவுளாக நினைத்தாலே போதும், அதில் இறைவன் காட்சி தருவான் என்பதற்கு தற்போதைய ஆதாரமாக விளங்கும்தலம்தான் கண்ணாப்பூர் சிவஸ்தலம்.

இத்தலத்திற்கு செல்ல நினைப்பவர்கள், திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் சாலையில் சாட்டியக்குடி வந்து அங்கிருந்து இடப்பக்கமாக கிழக்கு நோக்கி செல்லும் சாலையில் 2 கீமீ சென்று ஆதமங்கலம் அடுத்த கண்ணாப்பூர் கூட்டுரோட்டின் வலப்புரமாக பிரியும் சாலையில் உள்ள திருக்கோயில்தான் கண்ணாப்பூர் சிவஸ்தலம்.

மாட்டு தொழுவத்தில் கன்றுகளை கட்டிப்போட பயன்படும் தறி, சிவ வடிவத்தில் இருந்ததால், அதையே சிவனாக வழிபட்ட பெண்ணிற்கு, அந்த தறியே சிவனாக மாறி காட்சியளித்த தலத்தைப் பற்றி பார்ப்போம்.

இத்தலத்தின் வரலாறு

தமிழகத்தின் தேவூருக்குத் தென்பால் (தற்போதைய திருவாரூர் மாவட்டம்) சைவ வேளாளர் மரபில் சிவஞானம் நிரம்பப் பெற்று கமலவல்லி என்னும் சிவபக்தை வளர்ந்து வந்தாள்.

கமலவல்லி, இடையறாது சிவபெருமானை சிந்தித்து, சைவ நெறியில் வளர்ந்து வந்தாள். முற்பிறவி சிவபூஜையின் தொடர்பு, இந்த ஜென்மத்திலும் தொடர்ந்து வந்ததால் சிவ பூஜைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து சிரத்தையுடன் சிவனை வழிபட்டுவந்தாள்.

காலம் சென்றது, திருமணப் பருவத்தை அடைந்தாள். மணமகனை தேடி அலைந்து கமலவல்லிக்கு மணம் செய்வித்தனர். அந்த ஊரிலேயே தனி இல்லத்தில் இல்லறத்தை நடத்தச் செய்தனர் பெற்றோர்.

கமலவல்லி காரைக்கால் அம்மையாரைப் போன்று இல்லறத்தையும், தெய்வீகத்தையும் போற்றி இனிய வாழ்க்கை நடத்திவந்தாள்.

எனினும் உயிரிறைவனாகிய சிவபெருமானிடத்து பேரன்பு பூண்டு, தக்க அறங்ளை செய்து வாழ்ந்து வந்தாள். சிவனை இடைவிடாது பூஜை செய்தாள்.

கணவன், கமலவல்லியின் உயர்வை




உணராமல் அவள் பெரும்பாலான நேரத்தை சிவ பூஜையில் செலவிடுவதை விரும்பாமல், அவள் பூஜிப்பதில் வெறுப்புகொண்டு சிவலிங்கத்தை ஒரு கிணற்றில் எறிந்துவிட்டான்.

கமலவல்லி இதை உணர்ந்து, கணவனுக்கு மாறாக சிவனைப் பூஜிப்பதா அல்லது சிவ பூஜையை விடுவதா என சிந்தித்தாள். கணவன் அறியாதவாறு சிவபூஜை செய்வது என்ற முடிவிற்கு வந்தாள். தன் வீட்டு பசுங்கன்று கட்டும் தறி (முனை) ஒன்றை சிவலிங்கமாக பாவித்துப் பூஜை செய்துவந்தாள்.

நாட்கள் சென்றது கமலவல்லி தறியை வழிபடுவதை பார்த்து, தறியை யாராவது வழிபடுவார்களா? என்ற கேள்வி அவனுக்குள் எழுந்தது, ஒருவேளை இவளுக்கு பித்து ஏற்பட்டுவிட்டதோ என்ற எண்ணமும் மேலோங்கியது.

தறியை பூஜை செய்யும் கமலவல்லியின் செயல், கிராமம் முழுவதும் பரவி, அவளை பித்து பிடித்தவளாக எண்ணத்தோன்றியது.

அதிகம் பூஜையில் ஈடுபடக்கூடாது என்ற தன் கருத்துக்கு மாறாக நடக்கிறாள் என்பதை அறிந்த கணவன் சினம் கொண்டு, அக்கன்று கட்டும் தறியைக் கோடரி கொண்டு தாக்கினான்.

தாக்கப்பட்ட அந்த தறிமுளையில் உதிரம் வெளிப்பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த அவளது கணவனும், ஊர்மக்களும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

கமலவல்லியின் பக்தியை உலகத்தவரும்,அவள் கணவரும் அறிய இறைவன் அக்கட்டுத்தறியில் இலிங்க வடிவம் கொண்டு காட்சியளித்தார்.

இந்த நிகழ்விற்குபின், கமலவல்லியும், அவளது கணவனும் சிவலோகம் அடைந்தனர். கன்று கட்டும் தறி இலிங்கமாக மாறியதை வழிபட்ட மக்கள், இத்தலத்தை "கன்றாப்பூர்"













என வழங்கப்பெற்று வழிபடத்துவங்கினர்.

இந்த இலிங்கத்திருமேனி சுயம்பு மூர்த்தியாகத் தோன்றினாலும் தறியிலிருந்து தோன்றியதால் இறைவன் “நடுதறிநாதர்” எனப்பட்டார். அந்த கன்றுக்குட்டியின் நடுதறி இருந்த இடமே இன்று நடுதறிநாதர் கோயிலாக விளங்குகின்றது.

இன்றும் மூலவரது உச்சியில் கோடறி வெட்டு உள்ளதைக் காணலாம். இடும்பன் என்னும் அசுரன் இத்தலத்தில் நடுதறி நாதரை வழிபட்டு அருள்பெற்றான்.

இந்தப் பொருள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாதபடி இறைவன் எங்கும் இருப்பான், இறை நம்பிக்கையுடன் எந்தப் பொருளை வணங்கினாலும், அந்தப் பொருளாகவே இறைவன் மாறி காட்சித்தருவான் என்ற கருத்துக்கு இன்றும் நடுதறிநாதர் கோயில் ஒரு உதாரணம்.

இத்தலத்தின் பெருமைகளை திருநாவுக்கரசர் பாடியுள்ளார், இத்தலம் ஒரு பாடல் பெற்றதலமாக விளங்குகிறது.

இத்தலம் ஆயிரம் வருடங்களுக்கு பழமையான கோவிலாகும், புராணப்பெயர் திருக்கன்றாப்பூர், இத்தலத்து மூலவருக்கு நடுதறியப்பர், வஸ்ததம்ப ப்ரீஸ்வரர், நடுதறிநாதர் என்ற பெயர் உள்ளது.

தாயார்: மாதுமைநாயகி, ஸ்ரீ வல்லிநாயகி, தல விருட்சம்: கல்பனை.

தீர்த்தம்: கங்காமிர்தம், சிவகங்கை, ஞானா மிர்த்தம், ஞானகுபம்.

கோவில் அமைப்பு: மூன்று நிலைகள் கொண்ட சிறிய இராஜகோபுரம் கொண்ட கோவில், கொடி மரமில்லை, உயரமான பீடத்தில் நந்தி உள்ளது.

கோவிலின் உள்ளே தீர்த்தக்கிணறு மற்றும் வினாயகர். அடுத்துள்ள மண்டபத்தில் வரிசையாக சிவலிங்கம், வினாயகர் மூர்த்தங்கள் உள்ளன.

பிடாரியம்மன், சுப்பிரமணியர், சந்திரன், சூரியன், நவக்கிரகங்கள், சனீஸ்வரர் சன்னிதிகள் உள்ளன. அடுத்துள்ள நால்வருள் இருவர் அப்பராகவும், இருவர் சம்பந்தராகவும் காட்சிதருகின்றனர்.

முன்மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சன்னிதி. நின்ற திருக்கோலம். நேரே மூலவர் சன்னிதி. வலப்பக்கம் நடராஜ சபை, இடப்பக்கம் உற்சவ மூர்த்தங்கள். மூலவர் சதுர பீடம். பாணத்தில் வெட்டிய தழும்புள்ளது.

உள்பிரகாரத்தில் விநாயகர், சுந்தரேசுவரர், அறுவகை விநாயகர், முருகன், துர்க்கை, இலிங்கோத்பவர், கற்பகநாதர் முதலிய சன்னதிகள் உள்ளன.

### தேவாரப்பதிகம்:

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றும்
செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே என்றும்
துடியனைய இடைமடவாள் பங்கா என்றும்
சுடலைதனில் நடமாடும் சோதீ என்றும்
கடிமலர்தூய்த் தொடுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

### பிரார்த்தனை:

கண் நோய் நீங்க ஞானகுப தீர்த்தத்தில் நீராடியும், குழந்தைப்பேறு, புகழ் பெற இங்குள்ள சிவகங்கை தீர்த்தத்தில் நீராடியும் பிரார்த்தனை செய்துகொள்கின்றனர்.

### நேர்த்திக்கடன்:

வேண்டுகோள் நிறைவேறியவர்கள் இறைவனுக்கும் அம்மனுக்கும் திருமுழுக்காட்டு செய்து, புத்தாடை அணிவித்து, சிறப்பு பூசைகள் செய்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். கோவில் தொடர்பு எண்: +91 4365 204 144, 94424 59978

## இத்தலத்தின் சிறப்புகள்

- தேவார பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இது 120வது தலம்.
- இவ்வூரில் உள்ள எல்லா நிலங்களும் அருள்மிகு நடுதறிநாதர் பெயரிலேயே பட்டாவாக உள்ளன. தனிப்பட்ட எவருக்கும் சொந்தமாக வேறு பட்டா நிலங்கள் இல்லையாம்.
- இத்தலத்தை இருமுறை வழிபட்டால் உலகிலுள்ள எல்லா சிவத்தலங்களையும் வழிபட்ட பலன் கிடைக்கும்.
- இத்தலத்தின் வழியே நடந்துசென்றால் இத்தலத்தில் தங்கி வாழ்ந்த புண்ணியத்தைப் பெறலாம்.
- இத்தலத்தில் தங்கி சேவை செய்துவந்தால், நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள் மற்றும் அனைத்து நலன்களையும் பெறுவர்.
- கன்றாப்பூர் என்று ஒருமுறை சொன்னாலேயே பாவம் தீரும், நோய் நீங்கும், நல்வாழ்வு கிட்டும்.



கீதா-ராஜன்

## பழமொழி வடிவில் உணவுப் பழக்கம்

- பொங்குற காலத்தில் புளி.. மங்குற காலம் மாங்கா
- சீரகம் இல்லா உணவும், சிறு குழந்தைகள் இல்லா வீடும் சிறக்காது.
- தன் காயம் காக்க வெங்காயம் போதும்
- வாழை வாழ வைக்கும்
- அவசர சோறு ஆபத்து
- ஆறிய உணவு மூட்டு வலி உண்டாக்கும்
- இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை சாறு
- ரத்த கொதிப்புக்கு அகத்திக் கீரை
- இருமலை போக்கும் வெந்தயக் கீரை
- உஷ்ணம் தவிர்க்க கம்பங் களி
- கல்லீரல் பலம் பெற கொய்யாப் பழம்
- குடல் புண் நலம் பெற அகத்திக்கீரை
- கொலஸ்ட்ரால் குறைக்க பன்னீர் திராச்சை
- சித்தம் தெளிய வில்வம்
- சிறுநீர் கடுப்புக்கு அன்னாசி
- சூட்டை தணிக்க கருணை கிழங்கு
- ஜீரண சக்திக்கு சுண்டக்காய்
- தலை வலி நீங்க முள்ளங்கி சாறு
- தேனுடன் இஞ்சி ரத்தத் தூய்மை
- பூண்டில் இருக்கு பென்சிலின் சக்தி
- மூல நோய் தீர வாழைப்பூ கூட்டு
- வாந்திக்கு மருந்து மணத்தக்காளி
- வாத நோய் தடுக்க அரைக் கீரை
- வாய் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்
- பருமன் குறைய முட்டைக்கோஸ்
- பித்தம் தணிக்க நெல்லிக்காய்
- உணவு மருந்தாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் மருந்தே நமக்கு உணவாகும் நிலைமை உருவாகும்.



# பாடல் பெற்ற தலங்கள்

## எளிமையான பார்வையில்

இந்தியாவில் வைணவம் மற்றும் சைவத் தலங்கள் மட்டுமே அதிகம் உள்ளன, இதில் பெருமாளுடன் நேரடித் தொடர்பு கொண்ட தலங்கள் 108, சிவனுடன் நேரடி தொடர்பு உள்ள தலங்கள் 1008 என்று வரையறுத்துக் கூறினாலும், இந்த 1008 தலங்கள் தவிர, சித்தர்கள், ஞானிகள், மகான்கள், முனிவர்கள் போன்றோர்கள் மூலம் சிறப்பு பெற்ற பல ஆயிரம் சிவஸ்தலங்கள் உள்ளன.

இந்தியாவில் பல ஆயிரக்கணக்கான சிவன் கோவில்கள் இருந்தாலும், 274 கோவில்கள் மட்டும் பாடல்பெற்ற ஸ்தலங்கள் என்று அழைக் கப்படுகிறது.

தேவார மூவர் என்று போற்றப்படும், தேவாரத் தை உலகிற்கு அளித்த திருநாவுக்கரசர், திரு ஞானசம்பந்தர், சுந்தரர் வாழ்ந்திருந்த காலமாகிய 7, 8 மற்றும் 9ம் நூற்றாண்டுகளில் இயற்றப்பட்ட தேவார பதிகங்களில் இந்தக் கோவில்களைப் பற்றியும், கோவில்களில் குடி கொண்டுள்ள சிவபெருமானைப் பற்றிய சிறப்புகளும் கூறப் பட்டுள்ளது. இந்தக் கோவில்கள் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை.

திருமுறை கண்ட சோழன் என்றழைக்கப்படும் ராஜராஜ சோழன் காலத்தில், ராஜ ராஜ சோழனும், நம்பியாண்டார் நம்பிகளும், தில்லை சிதம்பரத்தில் தேவாரம் எழுதியிருந்த ஏட்டுச் சுவடிகளைக் கண்டுபிடித்து எடுத்த போது அவைகள் கறையானால் மூடப்பட்டிருந்தது.

பிறகு எண்ணை ஊற்றி கறையானைப் போக்கி ஏட்டை எடுத்துப் பார்க்கும் போது பல பதிகங்கள் சிதைந்திருந்தன. அதைக் கண்டு சோழ மன்னன் வருந்தியபோது "ஈண்டு வேண்டுவன வைத்தோம்" என்று அசரீரி வாக்கு எழ, பிறகு கிடைத்தவற்றை ஒழுங்கு படுத்தினார்கள்.

திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுத்து ஒழுங்குபடுத்தப்பட்டன. சைவத் திருமுறைகள் 12 ஆக வகுக்கப்பட்டுள்ளன.



இவற்றில் முதல் 7 தேவார மூவர் பாடிய பதிகங் களைப் பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளன.

முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களைக் கொண்டுள்ளன.

4,5,6–ஆம் திருமுறைகளில் திருநாவுக்கரசர் பாடிய பதிகங்களும், 7–ஆம் திருமுறையில் சுந்தரர் பாடிய பதிகங்களும் இடம் பெற்றுள்ளன.

தமிழ் இலக்கியங்களில் தேவாரப் பாடல்கள் என்று குறிப்பிடப்படும் இந்த பதிகங்கள் ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளன.

தேவார மூவர் என்று போற்றப்படும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் தோன்றி தேவாரம் பாடிய பிறகு, தேவாரம் பெற்ற ஸ்தலங்களுக்கு தனி மதிப்பு ஏற்பட்டது. இவர்கள் பல இடங்களில் பதிகங்கள் பாடி அற்புதங்களும் நிகழ்த்தியுள்ளனர்.

ஒரு சில சிவஸ்தலங்களுக்கு இவர்கள் நேரில் போகாமல் இருந்த போது, இறைவனே இவர்கள் கனவிலோ அல்லது அசரீரியாகவோ கூப்பிட்டு அவர்களை வரச்செய்து இறைவன் தன் மேல் பதிகங்கள் பாட வைத்திருக்கிறார்.

இதன்படி பார்த்தால்,

### திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலங்களின் எண்ணிக்கை

- திருநாவுக்கரசர் பதிகம் பாடிய சிவஸ்தலங்கள் எண்ணிக்கை. 223
- திருநாவுக்கரசர் சிவன் கோவில்களுக்கு நேரில் சென்று பதிகம் பாடிய சிவஸ்தலங்கள் 125
- நேரில் செல்லாமல் மற்ற சிவன் கோவில்களில் குடிகொண்டுள்ள சிவபெருமானைப் பற்றி பதிகம் பாடிய சிவஸ்தலங்கள் 98
- பதிகம் பெறாத சிவஸ்தலங்கள் 51

### திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலங்களின் எண்ணிக்கை

- திருஞானசம்பந்தர் பதிகம் பாடிய சிவஸ் தலங்கள் எண்ணிக்கை. 231
- திருஞானசம்பந்தர் சிவன் கோவில்களுக்கு நேரில் சென்று பதிகம் பாடிய சிவஸ்தலங்கள் 219
- நேரில் செல்லாமல் மற்ற சிவன் கோவில்களில் குடிகொண்டுள்ள சிவபெருமானைப் பற்றி பதிகம் பாடிய சிவஸ்தலங்கள் 12
- பதிகம் பெறாத சிவஸ்தலங்கள் 43

### சுந்தரரால் பாடல் பெற்ற ஸ்தலங்களின் எண்ணிக்கை

- சுந்தரர்பதிகம் பாடிய சிவஸ்தலங்கள் எண் ணிக்கை. 138
- சுந்தரர் சிவன் கோவில்களுக்கு நேரில் சென்று பதிகம் பாடிய சிவஸ்தலங்கள் 84
- நேரில் செல்லாமல் மற்ற சிவன் கோவில்களில் குடிகொண்டுள்ள சிவபெருமானைப் பற்றி பதிகம் பாடிய சிவஸ்தலங்கள் 54
- பதிகம் பெறாத சிவஸ்தலங்கள் 136

## பாடல் பெற்ற சிவ ஸ்தலங்கள் உள்ள இடங்கள்



- சோழநாடு காவிரி வடகரைத் தலங்கள் ............ 63
- சோழநாடு காவிரி தென்கரைத் தலங்கள் ............ 128
- ஈழநாட்டுத் தலங்கள் ............ 2
- பாண்டியநாட்டு தலங்கள் ............ 14
- கொங்குநாட்டு தலங்கள் ............ 7
- நடுநாட்டுத்தலங்கள் ............ 22
- தொண்டைநாட்டு தலங்கள் ............ 32
- துளுவ நாட்டுத்தலம் ............ 1
- மலைநாட்டுத்தலம் ............ 1
- வடநாட்டுத்தலம் ............ 4

(தலங்களின் பெயர்களை 10–ஆம் பக்கம் முதல் 14ம் பக்கம் வரை தொகுத்து கொடுத்துள்ளோம்)



ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# காவிரி தென்கரைத் தலங்கள்

1. திருவாட்போக்கி .........ரத்தினகிரிநாதர்
2. திருகடம்பந்துறை........கடம்பவனேஸ்வரர்
3. திருப்பராய்த்துறை.......பராய்த்துறை நாதர்
4. திருகற்குடி ................உஜ்ஜீவ நாதர்
5. திருமூக்கீச்சரம் (உறையூர், திருச்சி).....பஞ்சவர்னேஸ்வரர்
6. திருச்சிராப்பள்ளி ........தாயுமானவர்
7. திருஎறும்பியூர் (திருவெறும்பூர்)...........எறும்பீசர்
8. திருநெடுங்களம் .........நித்யசுந்தரேஸ்ரர்
9. மேலை திருக்காட்டுப்பள்ளி ....அக்னீஸ்வரர்
10. திருவாலம்பொழில்......ஆத்மநாதேஸ்வரர்
11. திருபூந்துருத்தி ...........புஷ்பவன நாதர்
12. திருக்கண்டியூர்...........பிரம்மசிரகண்டீசர்
13. திருசோற்றுத்துறை .....தொலையாச்செல்வர்
14. திருவேதிகுடி .............வேதபுரீஸ்வரர்
15. திருதென்குடித்திட்டை.... வசிஷ்டேஸ்வரர்
16. திருபுள்ளமங்கை.........ஆலந்துறை நாதர்
17. திருசக்கரப்பள்ளி (அய்யம்பேட்டை) .........சக்ரவாகேஸ்வரர்
18. திருக்கருகாவூர்..........முல்லைவன நாதர்
19. திருப்பாலைத்துறை.....பாலைவன நாதர்
20. திருநல்லூர்................பஞ்சவர்ணேஸ்வரர்
21. ஆவூர் பசுபதீச்சரம்.....பசுபதீஸ்வரர்
22. திருசத்திமுற்றம்..........சிவகொழுந்தீசர்
23. திருபட்டீச்சரம்............தேனுபுரீஸ்வரர்
24. பழையாறை வடதளி...சோமேஸ்வரர்
25. திருவலஞ்சுழி ............கற்பகநாதர்
26. திருக்குடமூக்கு (கும்பகோணம்)............கும்பேஸ்வரர்
27. திருக்குடந்தை கீழ்கோட்டம்...............நாகேஸ்வரசுவாமி
28. திருக்குடந்தைக் காரோணம் ................காசி விஸ்வநாதர்
29. திருநாகேஸ்வரம்.........சண்பக .................................ஆரண்யேஸ்வரர்
30. திருவிடைமருதூர்.......மஹாலிங்கேஸ்வரர்
31. தென்குரங்காடுதுறை...ஆபத்சகாயநாதர்
32. திருநீலக்குடி ..............நீலகண்டேஸ்வரர்
33. திருவைகல் மாடக்கோவில் ...........வைகல் நாதர்
34. திருநல்லம் .................உமாமஹேஸ்வரர்
35. திருக்கோழம்பம்..........கோகிலேஸ்வரர்
36. திருவாவடுதுறை ........மாசிலாமனி ஈஸ்வரர்
37. திருத்துருத்தி (குத்தாலம்).................உக்தவேதீஸ்வரர்
38. திருவழுந்தூர்.............வேதபுரீஸ்வரர்
39. மயிலாடுதுறை ...........மயூரநாதர்
40. திருவிளநகர்..............துறைகாட்டும் வள்ளலார்
41. திருப்பறியலூர் (பரசலூர்) ...................வீரட்டேஸ்வரர்
42. திருசெம்பொன்பள்ளி .சுவர்ணபுரீசர்
43. திருநனிபள்ளி (புஞ்ஜை) ....................நற்றுணையப்பர்
44. திருவலம்புரம் (மேலப்பெரும்பள்ளம்) ..வலம்புரநாதர்
45. திருதலைச்சங்காடு.....சங்காரண்யேஸ்வரர்
46. திருஆக்கூர் ..............தான்தோன்றியப்பர்
47. திருக்கடவூர் ..............அமிர்தகடேஸ்வரர்
48. திருக்கடவூர் மயானம் பிரம்மபுரீஸ்வரர்
49. திருவேட்டக்குடி..........திருமேனிஅழகர்
50. திருதெளிச்சேரி (கோயில்பத்து) ...........பார்வதீஸ்வரர்
51. திருதர்மபுரம் ..............யாழ்மூரிநாதர்
52. திருநள்ளாறு ...............தர்பாரண்யேஸ்வரர்
53. திருக்கோட்டாறு .........ஐராவதேஸ்வரர்
54. அம்பர் பெருந்திருக்கோவில் ..பிரம்மபுரீசர்
55. அம்பர் மாகாளம்.........மாகாளநாதர்
56. திருமீயச்சூர் ...............மேகநாதசுவாமி
57. திருமீயச்சூர் இளங்கோவில் ............சகலபுவனேஸ்வரர்
58. திருதிலதைப்பதி .........மதிமுத்தீஸ்வரர்





59. திருப்பாம்புரம்.............பாம்பு புரேஸ்வரர்
60. சிறுகுடி .......................சூட்சுமபுரீஸ்வரர்
61. திருவீழிமிழிலை..........நேத்ரார்பனேஸ்வரர்
62. திருவன்னியூர் ............அக்னீஸ்வரர்
63. திருக்கருவிலிக் கொட்டிட்டை .............சற்குனநாதேஸ்வரர்
64. திருபேணுபெருந்துறை.....சிவானந்தேஸ்வரர்
65. திருநறையூர் ..............சித்தி நாதேஸ்வரர்
66. அரிசிற்கரைப்புத்தூர்...சொர்ணபுரீஸ்வரர்
67. சிவபுரம் .....................சிவபுரநாதர்
68. திருகலயநல்லூர்.........அமிர்தகலசநாதர்
69. திருக்கருக்குடி ...........சற்குனலிங்கேஸ்வரர்
70. திருவாஞ்சியம்............வாஞ்சிநாதர்
71. நன்னிலம் ..................மதுவனேஸ்வரர்
72. திருகொண்டீச்சரம் .....பசுபதீஸ்வரர்
73. திருப்பனையூர் ............சௌந்தர்யநாதர்
74. திருவிற்குடி ...............வீரட்டானேஸ்வரர்
75. திருப்புகலூர் ..............அக்னீஸ்வரர்
76. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் ........வர்த்தமானேஸ்வரர்
77. இராமனதீச்சுரம் ..........இராமநாதசுவாமி
78. திருபயற்றூர் ..............திருபயற்றுநாதர்
79. திருசெங்கட்டாங்குடி ..உத்தராபதீஸ்வரர்
80. திருமருகல் .................இரத்தினகிரீஸ்வரர்
81. திருச்சாத்தமங்கை......அயவந்தீஸ்வரர்
82. நாகைக் காரோணம் (நாகப்பட்டினம்) ...........காயாரோகனேஸ்வரர்
83. சிக்கல்........................நவநீதேஸ்வரர்
84. திருக்கீழ்வேளூர்.........கேடிலியப்பர்
85. தேவூர்.........................தேவபுரீஸ்வரர்
86. பள்ளியின் முக்கூடல் .... முக்கோண ................................. நாதேஸ்வரர்
87. திருவாரூர் .................வன்மீகி நாதர்
88. திருவாரூர் அரநெறி...அறனெறியப்பர்
89. ஆரூர் பறவையுன் மண்டளி.....................தூவாய் நாயனார்
90. திருவிளமர்.................பதஞ்சலி மனோஹரர்
91. திருக்கரவீரம் .............கரவீரநாதர்
92. திருப்பெருவேளுர்.......அபிமுக்தீஸ்வரர்
93. திருதலையாலங்காடு..ஆடவல்லீஸ்வரர்
94. திருக்குடவாயில்.........கோனேஸ்வரர்
95. திருச்சேறை ...............செந்நெறியப்பர்
96. திருநாலூர் மயானம்...ஞானபரமேஸ்வரர்
97. திருக்கடுவாய்க் கரைப்புத்தூர் .............சொர்ணபுரீசுவரர்
98. திருஇரும்பூளை (ஆலங்குடி) ................ஆபத்சகாயேஸ்வரர்
99. திருஅரதைப் பெரும்பாழி (ஹரிதுவார மங்கலம்) .... பாதாளேஸ்வரர்
100. திருஅவளிவநல்லூர்...சாட்சி நாநர்
101. திருப்பரிதிநியமம்........பரிதியப்பர்
102. திருவெண்ணியூர்.......வெண்ணிக்கரும்பர்
103. திருப்பூவனூர்.............புஷ்பவனநாதர்
104. திருப்பாதாளீச்சரம் ......சர்ப்ப புரீஸ்வரர்
105. திருக்களர் .................பாரிஜாதவனேஸ்வரர்
106. திருசிற்றேமம்.............பொன்வைத்த நாதேஸ்வரர்
107. திருவுசத்தானம் ..........மந்திர புரீஸ்வரர்
108. திருஇடும்பாவனம் ......சற்குனநாதேஸ்வரர்
109. திருக்கடிக்குளம் .........கற்பகநாதர்
110. திருத்தண்டலை நீணெறி .....................நீணெறிநாதர்
111. திருக்கோட்டூர் ............கொழுந்தீசர்
112. திருவெண்டுறை.........வெண்டுறைநாதர்
113. திருக்கொள்ளம்புதூர்..வில்வவனேஸ்வரர்
114. திருப்பேரெயில் ...........ஜகதீஸ்வரர்
115. திருக்கொள்ளிக்காடு .அக்னீஸ்வரர்
116. திருதெங்கூர் .............வெள்ளிமலைநாதர்
117. திருநெல்லிக்கா ..........நெல்லிவனேஸ்வரர்
118. திருநாட்டியாத் தான்குடி .....................மாணிக்கவண்ணர்
119. திருக்காறாயில் ...........கண்ணாயிரநாதர்
120. திருகன்றாப்பூர் ...........நடுதறியப்பர்
121. திருவலிவலம் ............மனத்துனைநாதர்
122. திருகைச்சினம் ............. கைசின நாதேஸ்வரர்
123. திருக்கோளிலி...........கோளிலிநாதர்
124. திருவாய்மூர் ...............வாய்மூர்நாதர்
125. திருமறைக்காடு (வேதாரண்யம்).............. மறைக்காட்டு மணாளர்
126. அகத்தியான்பள்ளி .....அகஸ்தீஸ்வரர்
127. கோடியக்கரை............அமிர்தகடேஸ்வரர்

# காவிரி வடகரைத் தலங்கள்

1. சிதம்பரம்.................... நடராஜர்
2. திருவேட்களம் ........... பாசுபதேஸ்வரர்
3. திருநெல்வாயல் ......... உச்சிநாதேசுவரர்
4. திருக்கழிப்பாலை ....... பால்வண்ண நாதர்
5. திருநல்லூர் பெருமணம் ............... சிவலோக தியாகேசர்
6. திருமயேந்திரப்பள்ளி.. திருமேனிஅழகர்
7. தென் திருமுல்லைவாயில் .... முல்லைவன நாதர்
8. திருக்கலிக்காமூர் ...... சுந்தரேஸ்வரர்
9. திருசாய்க்காடு (சாயாவனம்).............. சாயாவனேஸ்வரர்
10. திருபல்லவனீச்சுரம் .... பல்லவனேஸ்வரர்
11. திருவெண்காடு ......... சுவேதஆரன்யேஸ்வரர்
12. கீழை திருக் காட்டுப்பள்ளி ............... ஆரண்ய சுந்தரேஸ்வரர்
13. திருக்குருகாவூர் வெள்ளடை ............... வெள்ளடையீசுவரர்
14. சீர்காழி ...................... பிரம்மபுரீசர்
15. திருகோலக்கா ........... சத்தபுரீசுவரர்
16. திருபுள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன் கோவில்) ..... வைத்தியநாதர்
17. திருக்கண்ணார் கோவில் (குறுமானக்குடி ) ....... கண்ணாயிரநாதர்
18. திருக்கடைமுடி .......... கடைமுடிநாதர்
19. திருநின்றியூர்............. மகாலட்சுமி நாதர்
20. திருபுன்கூர்................ சிவலோகநாதர்
21. நீடூர்............................ அருட்சோம நாதேஸ்வரர்
22. திருஅன்னியூர்........... ஆபத்சகாயேஸ்வரர்
23. திருவேள்விக்குடி....... கல்யாணசுந்தரர்
24. திருஎதிர்கொள்பாடி ... ஐராவதேஸ்வரர்

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

25. திருமணஞ்சேரி ......... அருள்வள்ள நாதர்
26. திருக்குருக்கை.......... வீரட்டேஸ்வரர்
27. திருக்கருப்பறியலூர்........குற்றம் பொருத்த நாதர்
28. திருக்குரக்குக்கா....... கோந்தல நாதர்
29. திருவாளொளிப் புத்தூர் ...................... மாணிக்கவண்ணர்
30. திருமண்ணிப் படிக்கரை.................. நீலகண்டேசர்
31. திருஓமாம்புலியூர் ....... துயரந்தீர்த்தநாதர்
32. திருக்கானாட்டு முல்லூர்....பதஞ்சலி நாதர்
33. திருநாரையூர் ............ சௌந்தரேசுவரர்
34. திருக்கடம்பூர்............ அமிர்தகடேசர்
35. திருபந்தனைநல்லூர் .. பசுபதி நாதர்
36. திருகஞ்சனூர் ........... அக்னீஸ்வரர்
37. திருகோடிக்கா .......... திருக்கோடீஸ்வரர்
38. திருமங்கலக்குடி ........ பிராண நாதேஸ்வரர்
39. திருப்பனந்தாள் .......... தாலவனேஸ்வரர்
40. திருஆப்பாடி ............. பாலுகந்த ஈஸ்வரர்
41. திருசேய்ஞலூர் .......... சத்யகிரீஸ்வரர்
42. திருந்துதேவன்குடி (நண்டாங்கோவில் )... கற்கடேஸ்வரர்
43. திருவியலூர்................சிவயோகிநாத சுவாமி
44. திருக்கொட்டையூர் .... கோடீஸ்வரர்
45. திருஇன்னாம்பர்......... எழுத்தறிநாதர்
46. திருப்புறம்பியம்........... சாட்சி நாதேஸ்வரர்
47. திருவிசயமங்கை ....... விஜயநாதர்
48. திருவைகாவூர் ........... வில்வவனநாதர்
49. வடகுரங்காடுதுறை.... தயாநிதீஸ்வரர்
50. திருப்பழனம்.............. ஆபத்சகாயநாதர்
51. திருவையாறு............. ஐயாரப்பர்
52. திருநெய்த்தானம் ....... நெய்யாடியப்பர்
53. திருப்பெரும்புலியூர் .... வியாக்ர புரீசர்
54. திருமழபாடி ............... வஜ்ரதம்ப நாதர்
55. திருப்பழுவூர் ............. ஆலந்துறையார்
56. திருக்கானூர் ............ செம்மேனி நாதர்
57. திருஅன்பில் ஆலாந்துறை............. சத்யவாகீஸ்வரர்
58. திருமாந்துறை ........... ஆம்பிரவன நாதர்
59. திருபாற்றுறை ........... ஆதிமூலநாதர்
60. திருவானைக்கா......... ஜம்புகேஸ்வரர்
61. திருபைஞ்ஜிலி ........... ஞீலிவனேஸ்வரர்
62. திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி) மாற்றுறை வரதீஸ்வரர்
63. திருஈங்கோய்மலை .... மரகதாசலேசுவரர்



# பாண்டியநாடு, நடுநாடு, தலங்கள்

**பாண்டியநாடு**

1. திருஆலவாய் (மதுரை)
2. திருஆப்பனூர்
3. திருப்பரங்குன்றம்
4. திருவேடகம்
5. திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை)
6. திருப்புத்தூர்
7. திருப்புனவாயில்
8. திருஇராமேச்சுரம்
9. திருவாடானை
10. திருக்கானப்பேர் (காளையார்கோவில்)
11. திருப்பூவணம்
12. திருச்சுழியல் (திருச்சுழி)
13. திருக்குற்றாலம் (குறும்பலா)
14. திருநெல்வேலி

**நடுநாடு**

1. திருநெல்வாயில்அரத்துறை
2. திருத்தூங்கானைமாடம்
3. திருக்கூடலையாற்றூர்
4. திருஎருக்கத்தம்புலியூர் (இராசேந்திரப்பட்டிணம்)
5. திருத்தினைநகர் (தீர்த்தனகிரி)
6. திருச்சோபுரம் (தியாகவல்லி)
7. திருவதிகை
8. திருநாவலூர் (திருநாமநல்லூர்)
9. திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)
10. திருநெல்வெண்ணெய்
11. திருக்கோவலூர்
12. திருஅறையணிநல்லூர் (அரகண்ட நல்லூர்)
13. திருஇடையாறு


அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள், மாத இதழ்கள், புக் ஓர்க், அட்டைப்பட வடிவமைப்பு, போன்றவை தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்

Bhaanrajg Graphics

செல்: +91-8825844033




ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# தொண்டைநாடு, கொங்குநாட்டு, ஈழநாடு துளுவ நாடு, மலைநாடு, வடநாடு தலங்கள்

14. திருவெண்ணெய்நல்லூர்
15. திருத்துறையூர் (திருத்தளூர்)
16. திருவடுகூர் (ஆண்டார்கோவில்)
17. திருமாணிக்குழி
18. திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்)
19. திருமுண்டீச்சுரம்
20. திருபுறவார்பனங்காட்டூர்
21. திருஆமாத்தூர்
22. திருவண்ணாமலை

**தொண்டைநாடு**

1. திருக்கச்சிஏகம்பம் (காஞ்சிபுரம்)
2. திருக்கச்சிமேற்றளி (பிள்ளைப்பாளையம்)
3. திருஓணகாந்தன்தளி
4. திருக்கச்சிஅனேகதங்காவதம்
5. திருக்கச்சிநெறிக்காரைக்காடு
6. திருக்குரங்கணில்முட்டம்
7. திருமாகறல்
8. திருவோத்தூர்
9. திருவன்பார்த்தான்பனங்காட்டூர் (திருப்பனங்காட்டூர்)
10. திருவல்லம்
11. திருமாற்பேறு
12. திருஊறல் (தக்கோலம்)
13. திருஇலம்பையங்கோட்டூர்
14. திருவிற்கோலம் (கூவம்)
15. திருவாலங்காடு (பழையனூர்)
16. திருப்பாசூர்
17. திருவெண்பாக்கம் (பூண்டி)
18. திருக்கள்ளில்
19. திருக்காளத்தி
20. திருவொற்றியூர்
21. திருவலிதாயம் (பாடி)
22. வடதிருமுல்லைவாயில்
23. திருவேற்காடு
24. திருமயிலை (மயிலாப்பூர்)
25. திருவான்மியூர்
26. திருக்கச்சூர் (ஆலக்கோவில்)
27. திருஇடைச்சுரம்
28. திருக்கழுக்குன்றம்
29. திருஅச்சிறுப்பாக்கம்
30. திருவக்கரை
31. திருஅரசிலி (ஒழுந்தியாப்பட்டு)
32. திருஇரும்பைமாகாளம்

**கொங்குநாட்டுத் தலங்கள்**

1. திருஅவிநாசி
2. திருமுருகன்பூண்டி
3. திருநணா (பவானி)
4. திருக்கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்கோடு)
5. திருவெஞ்சமாக்கூடல்
6. திருப்பாண்டிக்கொடுமுடி
7. திருக்கருவூரானிலை (கரூர்)

**ஈழநாடு**

1. திருக்கோணமலை
2. திருக்கேதீச்சுரம்

**துளுவ நாடு**

1. திருகோகர்ணம்

**மலைநாடு**

1. திருவஞ்சைக்களம்

**வடநாடு**

1. திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்)
2. இந்திரநீலப்பருப்பதம் (நீலகண்டசிகரம்)
3. அனேகதங்காவதம் (கௌரிகுண்டம்)
4. திருக்கேதாரம் (கேதார்நாத்)
5. நொடித்தான்மலை (திருக்கயிலாயம்) மனித உடலுடன் தரிசிக்க முடியாததால் இத்தலத்தை கணக்கில் கொள்வது கிடையாது.



# சர்க்கரை நோயை குணமாக்கும் நிலவேம்பு கஷாயம்

இதுவரை நிலவேம்பு என்றால் சுரம், நீர்க்கோவை, வயிற்றுப் பொருமல், குளிர்காய்ச்சல் போன்ற நோய்கள் குணமாகும். என்று சித்த மருத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது கரோனா போன்ற கிருமிகளுக்கும், இந்த நிலவேம்பு மிக பயன்உள்ள மருந்தாக திகழ்வதாலும், மனிதர்களுக்கு தேவையான நோய் எதிர்ப்பு சக்தியை தருவதாலும், ஆங்கில மருத்துவமனைகளில் கூட நிலவேம்பு போன்றவை சர்வ சாதாரணமாக நோயாளிகளுக்கு கொடுக்கின்றனர்.

தமிழ்நாட்டில் பல இடங்களில் டெங்கு காய்ச்சல் பரவியபோது தமிழக அரசால் நிலவேம்புக் குடிநீர் டெங்குவிற்கு எதிரான தடுப்பு மருந்தாக பரிந்துரைக்கப்பட்டு, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் வழங்கப்பட்டது.

தற்போதைய ஆராய்ச்சியில் நிலவேம்பு புற்றுநோய் கிருமிகளை கட்டுப்படுத்துவதுடன், நில வேம்புடன் 12 வகையான முக்கிய மூலிகைகளும் கலந்து வழங்கப்பட்டு வருகிறது.



தற்போது நிலவேம்பு பயன்படுத்துபவர்களுக்கு உடலில் உள்ள சர்க்கரை நோய் கூட குறைந்திருப்பதாக கண்டறியப்படுகிறது.

இணைய தளங்களில் நிலவேம்பின் தாவர பெயரை குறித்து தேடிப்பார்த்தால் (Andrographis paniculata) தினமும் தொடர்ந்து நிலவேம்பை எடுத்துக் கொண்டால் ரத்தத்தில் குளுகோஸ் அளவை வெகுவாக குறைப்பதாக நிறைய ஆராய்ச்சி கட்டுரைகள் கிடைக்கிறது.

இதில் ஒரு படி மேலாக, ஒருவர் பதிவிட்ட பதிவில், "3 டம்ளர் தண்ணீரில் ஒரு பெரிய டீஸ்பூன் நிலவேம்பு பொடி போட்டு 1 டம்ளர் வற்றும் வரை கொதிக்க விட்டு தினமும் காலை 1 வேளை இரவு வேளை என ஒன்றரை மாதம் தனது தயாருக்கு கொடுத்ததாகவும், அவ்வாறு கொடுத்ததில் 290 அளவு இருந்த சர்க்கரை அளவு வெறும் 80 ஆக குறைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். காய்ச்சலுக்கு கஷாயம் குடிக்க போய் சர்க்கரை நோய் குணமாகி விட்டது. என்றும் பதிவிட்டுள்ளார்.

அதிகப்படியான சர்க்கரை நோய் உள்ளவர்கள் இந்த கொரானா வைரஸ் காலத்தில், நிலவேம்பை பயன்படுத்தி, வைரஸ் கிருமிக்கு மருந்தாகவும், சர்க்கரை நோய்க்கு தீர்வாகவும் அமையுமா என்பதை ஆராய்ந்து பார்த்தால் நமது வருங்கால சந்ததிக்கு நன்மை தருவதாக அமையும்.

# ஸ்ரீ ராகவேந்திரர் திருத்தல திருப்பணி



கலியுகத்தில் தோன்றி மறைந்த மகான்கள் பலர், தங்களது தெய்வீக ஆற்றலால் இன்றும் பக்தர்களுக்கு பல்வேறுவகையில் அருளாசி வழங்கி வருகின்றனர்.

இதில் குறிப்பிடத்தக்க மகான் ஸ்ரீ ராகவேந்திரர் சுவாமிகள், தமிழகத்தில் இவருக்கு பல்வேறு சிறு சிறு ஆலயங்கள் அமைக்கப்பட்டு பிரார்த்திக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் தென் மாவட்டமான திருநெல்வேலியில் பிருந்தாவனம் அமைந்துள்ளது. மகான் தன் பிருந்தாவனம் அமையவேண்டி ஒருவரின் கனவில் ஆசீர்வாதம் செய்தார்.



அட்சதை தந்து அவருடைய மடத்தை கட்டுமாறு கூறினார் அவரது விருப்பப்படி மடம் கட்டப் பட்டு பூஜை நடந்து வருகின்றது. 2006 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

அவர் தனது மகிமைகளை குடும்பத்தினருக்கும், வந்து கும்பிட்டவர்களுக்கும் வழங்கி வருகிறார் கல்யாண தடை, குழந்தை இல்லா பிரச்சனை முதலிய பல வற்றை தீர்த்து வருகிறார்.

வருடா வருடம் ராகவேந்தரின் ஆராதனை மஹோத்ஸவம் மூன்று நாட்கள் சிறப்பாக நடக்கிறது. அன்று அன்னதானம் வழங்கப்படுகிறது. அவருடைய ஜெயந்தி விழா வும் நடைபெறுகிறது.

14 வருடங்கள் ஆனதால் மடத்தின் சீரமைப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த சீரமைப்பு பணியில் பங்கெடுக்க விரும்பும் பக்தர்கள், எஸ்.ராமன், 9488904362 இந்த அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

முகவரி: ஸ்ரீ ராகவேந்திரர் ம்ருத்திகா பிருந்தாவனம், வடக்கு ரத வீதி, மேலதிருவேங்கடநாதபுரம், திருநெல்வேலி 627006.

## ஆன்மிக மலர்கள்

- பால், தயிர், கோமூத்திரம், சாணம் கலந்தது பஞ்சகவ்ய கலவையை வாரம் ஒரு முறை வீடுகளில் தெளிக்க, தோஷம், தீட்டு நீங்கி, லஷ்மி கடாக்ஷசம் கிடைக்கும்.
- ருத்ராட்சம், சாளக்கிராமம், துளசி, வில்வம் உள்ள இடத்தில் செய்வினை அணுகாது.
- புத்திர பாக்கியம் இல்லாதோர் 6 தேய்பிறை அஷ்டமிகளில் காலபைரவருக்கு சகஸ்ர நாம அர்ச்சனை செய்தால் விரைவில் புத்திர பாக்கியம் கிட்டும்.
- வியாழக்கிழமைகளில் ஒரு நேரம் விரதம் இருந்து மாலையில் தட்சணா மூர்த்திக்கு தொடர்ந்து நெய்விளக்கு ஏற்றி வந்தால், கருத்தரிப்பு ஏற்படும் வாய்ப்பு உண்டு.
- வறுமையில் இருப்பவருக்கு தானம் கொடுத்தல், பூஜை நடக்காமலிருக்கும் கோவில்களில் பூஜை நடக்க உதவுதல், அனாதைப் பிணங்களின் தகனத்திற்கு உதவுதல் ஆகிய மூன்றும் செய்தால் அசுவமேத யாகம் செய்ததற்குச் சமம்.



ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இணையதளம் வாயிலாக மாதம் இரண்டுமுறை வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புக்
அனைத்து இதழ்களையும்
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்.
உங்கள் நலம் விரும்பிகளுக்கு ஷேர் செய்து அவர்கள் பயன்பெற உதவுங்கள்
மேலும் விபரங்களுக்கு போன்: 08825844033



# பேரொளியான மற்றும் பேரானந்தமான இறைவன்

14.11.1937ல் ஆற்றிய சொற்பொழிவு

ப்ரிய குருதேவர் கூறுகிறார்: “இயற்கை அனைத்துமே பொய்யானது. இயற்கையைக் கடந்த ஒன்றுதான் ஒரே உண்மையான மெய்ப்பொருள். இன்று என்னைச் சுற்றியுள்ள சூரிய வெளிச்சத்தைப் பார்த்தவண்ணம், நான் ஆசிரம மைதானத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். கடற்கரைக்குச் செல்லும், படிக்கட்டுகளை நான் தாண்டியதும், படிக்கட்டுகளின் மின் விளக்குகள் வேலை செய்கின்றனவா என்று பார்க்க, நான் நின்று அவற்றின் ஸ்விட்சைத் திருப்பினேன். ஆனால் நான் அவற்றைப் பார்க்க முடியவில்லை. ஏனெனில், நான் அங்கு நின்று கொண்டிருக்கும் போது, இறைவனின் ஒளிகளை வேறுபடுத்த முடியாமல் செய்துவிட்டது. சூரியனைக்கூட என்னால் பார்க்கவே முடியவில்லை. நான் தெளிவாகப் புரிந்துகொண்டது. சூரிய ஒளியோ அல்லது மின்சார ஒளியோ எதுவுமே உண்மையில்லை என்பதாகும். உண்மையான ஒரே ஒளி இறைவனின் ஒளிதான்.”

வானத்தில் திடீரென ஆயிரம் சூரியர்களின் ஒளி
ஒரே காலத்தில் உதித்து எண்ணமுடியாத ஒளிவெள்ள
உலகை மூழ்கடித்தால், அத்தூயோனின் கம்பீரமும்
பிரகாசமும் கனவில் காண்பதற்கு ஒப்பாகும்.
(பகவத் கீதை அத்.11 ஸ்லோகம் 12)

“அந்த மகத்தான தெய்வீகக் காட்சியில் அவன் தனது பேரொளியின் முடிவற்ற வெளிப்பாடுகளாகிய உலகங்களை அடுக்கடுக்காகக் காட்டினான். நான் கண்ட இவை அனைத்தும், அவனது உணர்வு நிலையின் தோற்றங்கள் மட்டுமே. மேலும் நாம் அவனுடன் இசைந்திருந்தால், தெய்வீக சான்னித்தியத்தின் சமுத்திரப் பொழிவில் நம் அறிவுணர்ச்சி எங்கும் வியாபித்து எல்லையற்றகாகிறது.’

மேலும் அவர் கூறுகிறார்: “ மெய்ப்பொருள் அறியப்பட்டதும், நாம், நம்மை மெய்ப்பொருள் என்று அறிந்தும், நிலமோ அல்லது கடலோ, புவியோ அல்லது ஆகாயமோ இல்லைஅனைத்தும் அவனே. அனைத்தும் மெய்ப்பொருளில் கரைகின்ற நிலையை எவராலும் விவரிக்க முடியாது. ஓர் உன்னதப் பேரின்பம் உணரப்படுகிறதுஆனந்தம், அறிவு மற்றும் அன்பின் நிரந்தர நிறைவு. என்னால் அதை ஒரு பக்தனின் முகத்தில், அந்த ஆனந்தத்தால் அவனது ஆன்மா, காற்றில் இலை நடுங்குவதைப்போல் நடுங்குகின்றதா என்று பார்க்க முடியும். இப்படிப்பட்டவர்தான் ஒரு யோகி. சாதாரண வாழ்க்கையின் பணிகளை ஆழ்ந்த, ஆன்மபூர்வமான, உற்சாகம் இழக்கப்படாத தியானத்துடன் சமநிலைப்படுத்துவதன் மூலம் மட்டுமே இந்தப் பரவசம் அறியப்படும்.”

## உண்மையான விடுதலைக்கான பாதை

மேலும் குருதேவர் அருளுகிறார்: “அகங்காரம், தற்பெருமை, பேராசை, கோபம் மற்றும் சுயநலத்தின் இதர விரும்பத்தகாத விளைவுகள்தான், ஆன்ம அறியாமையாகிய துன்பத்திலிருந்து மனிதனை தப்பிக்க விடாமல் தடுத்து, ஆன்மீக வளர்ச்சிக்குத் தடைகளாக உள்ளன. ஞானம் பெற்றிருப்பவரும், இறைவனை எல்லாவற்றிக்கும் மேலாக நேசிப்பவருமான ஓர் ஆன்மீக குருவின் போதனை பின்பற்றுவதும் மற்றும் அத்தகைய குருவின் விருப்பங்களுடன் இசைந்திருப்பதும்தான் சரியான பாதையாகும். அந்தப் பாதை விடுதலைக்கு அழைத்துச்செல்கின்றது. உங்களுடைய விருப்பங்கள், கடந்த பிறவிகளின் பழக்க வழக்கங்களாலும், மேலும் நீங்கள் இடையறாது உருவாக்கிக் கொண்டிருக்கும் புதிய பழக்க வழக்கங்களாலும்தான் வழிகாட்டப்படுகின்றன. இவை ஆன்மாவை கைதியாகப் பிடித்து, என்றும் நிலைத்திருக்கும் விடுதலைச் சாலை வழியே நீங்கள் விரைவாக ஓடிச்செல்வதை சாத்திய மற்றதாக ஆக்குகிறது.”

“வாழ்க்கைப் பாதையின் ஒரு பக்கத்தில் அறியாமை என்னும் இருண்ட பள்ளத்தாக்கும் மறுபக்கத்தில் சாசுவதமான ஞான ஒளியும் இருக்கிறது. உண்மையான குருவின் வழிகாட்டுதலை நீங்கள் பின்பற்றும்போது, நீங்கள் விடுதலைக்கான பாதையில் பாதுகாப்பாக நடந்து செல்வீர்கள். அப்போது,, நீங்கள் விரும்புவதெல்லாம் விவேகத்தின் அடிப்படையில் இருக்கும். மேலும் சிறிதளவு முயற்சிகூட இல்லாமல் உங்களை வந்தடையும். சராசரம் முழுவதும் இறைவனின் சங்கல்பத்தினால் படைக்கப்பட்டுள்ளது. அதனுடன் நீங்கள் இசைந்திருக்கும் போது, நீங்கள் விரும்பும் எதுவாயினும், வெறும் நினைத்த மாத்திரத்திலேயே நிறைவேற்றப்படுகின்றது. நான் இனிமேலும் விரும்பக்கூடத் துணிவதில்லை, ஏனென்றால் என் மனதில் உள்ள எதுவாயினும் என்னை வந்தடையும் என்பது எனக்குத் தெரியும்.

மேலும் அவர் கூறுகிறார்: “உண்மையான பக்தன் கூறுகிறான்: “இறைவா, எனக்கு எந்த விருப்பமும் இல்லை எனக்கு வேண்டியதையெல்லாம் உன்னிடத்திலேயே கண்டுவிட்டேன். இதை விட வேறு எந்தப்பேறும் பெரியதாக இருக்காது (“எதை அடைந்து அதிலும் மிக்கதொரு வேறு லாபத்தையும் நினைப்பதில்லையோ, எதில் நிலைத்திருந்து பெருந்துக்கத்தாலும் அசைக்கப்படுவதில்லையோ, அந்த நிலை”) (பகவத் கீதை அத்.6 ஸ்லோகம் 22) இறைவனது ஞானம் அன்பு மற்றும் ஆனந்தத்தைப் பெற்றிருப்பதால், இதயத்தின் எல்லா ஆசைகளும் நிறைவேற்றப்படுகின்றன. இது ஒரு மகத்தான நிலை. மெய்ப்பொருளுடன் நீங்கள் ஒன்றிணைந்திருக்கும் பொழுது நீங்கள் ஓர் அரசர் மனநிறைவையும், முழுமையையும் அடைந்த, அமைதி மற்றும் பேரானந்தத்தின் அரசர் ஆவீர். நீங்கள் அவனுடன் ஒன்றிணைந்த நிலையில், முழு உலகமும் உங்கள் முன்னால் நின்றுகொண்டு உங்களது கட்டளையை நிறைவேற்றத் தயாராக உள்ளதைக் காண்கிறீர்கள். இறைவன் மனிதனை அவனது பிரதிபிம்பமாகப் படைத்துள்ளதால் அவனைக் காணும் அனைவரும் அவர்களுக்குள் உள்ள அவனது சித்தம், அவர்களுடைய மிக அற்பமான உத்தரவையும் நிறைவேற்றுவதைக் காண்கிறார்கள்.”.

இறைவனுடனான பக்தி அல்லது பேரன்பு அல்லது தீவிரமான மன நெருக்கம் எவ்வாறிருக்கும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

இறைவனுக்கு முதலிடம்.

வேதங்கள் மற்றும் உபனிடதங்கள் கூறுவதும் மகான்கள் கூறுவதும்



91
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக



குருப்ரியா

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

முதலிடம் இறைவனுக்கே. அந்தக்காலத்தில் மனிதர்கள் கூறுவது முதலிடம் இறைவனுக்கு என்பதுதான். தினமும் காலையில் எழுந்த உடன் இறைவனை நினைத்து பிரார்த் தனை செய்து தியானத்தால் அவளை தொடர்பு கொண்டு அவனைச் சேவித்து, பின்னர் மற்ற பணிகளைச் செய்தால் மிகவும் நன்றாகயிருக்கும். சம்சார வாழ்க்கை வாழுபவர்கள் இறைவனை வேண்டிக் கொண்டே குழந்தை பெற்றால் அக்குழந்தை இறைவனை சேவிப்பதிலும் அவனை நினைத்து வாழ்வதிலும் அதிக கவனத்தைச் செலுத்தக்கூடிய குழந்தையாக இருக்கும் என்பர். பணத்தையும் பொருளையும் புகழையும் நினைத்துக் கொண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தால் அந்தக் குழந்தை பணம் நிறைய ஈட்ட வேண்டும்; அதில் புகழ் பெற்று வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கும். வன்மம், வஞ்சகம் இவற்றை எண்ணினால் அதுபோன்ற குழந்தைகள்தான் பிறக்கும் என்பர். இன்றைய உலகம் ஏன் இப்படியிருக்கிறது என்றால் பேறும் வளர்ப்பும்தான் காரணம் என்கிறார்கள். இந்த நிலை, அதாவது உலகம் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது. மனிதர்களின் எண்ணங்கள் எப்படியுள்ளது என்பதை ஆராய்ந்துப் பார்த்தால் அவர்களுடைய தாயின் எண்ணங்கள் அல்லது பரம்பரை எண்ணங்கள்தான் அதற்குக் காரணமாக உள்ளது எனத் தெரியவரும் என்பர்.

ஆனால், யாராவது இறைவனை நினைத்து இறை பக்தியுடன் தனக்கு ஒரு குழந்தை இறைபக்தியுடைய அல்லது இறைவனை தொடர்பு கொள்கின்ற அல்லது இறைவனுடன் நெருக்கமான ஓர் ஆத்மா குழந்தையாக வர வேண்டும் வேண்டுமென்று கேட்டால் அவன் கேட்டபடியே கொடுப்பான். ஆனால் கேட்டால் மட்டும் கிடைக்காது, கேட்பவர்களின் மனம் எந்த நிலையிலுள்ளதோ அந்த நிலையிலுள்ள குழந்தை கிடைக்கும். அந்த நிலையிலுள்ள மனமாக இருந்தால் மட்டும்தான் அதே போன்று கேட்க முடியும். எந்தக் குறையுமில்லாத சத்திய யுகம்தான் அதற்கு உதாரணம். மற்ற மூன்று யுகங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்போது அது ஒரு வித்தியாசமான யுகமாக இருக்கிறது. ஏனென்றால், அனைவரும் இறைவனுடன் ஒன்றி, இறை நினைவில் இருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் கேட்பதும் கிடைக்கும்; நினைப்பதும் நடக்கும். சத்திய யுகமில்லாத தற்போதைய யுகத்திலே பலபேர் உதாரணமாக இருந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர்தான் ஸ்வாமி விவேகானந்தருடைய அன்பு அன்னை புவனேஸ்வரி. அவர் ஒரு சிவபக்தை. அவர், சிவபெருமானே தனக்கு குழந்தையாக வரவேண்டும் என்று சிவனிடத்தில் மிகுந்த பக்தி கொண்டு நிறைய பாடல்கள் பாடியிருக்கிறார். அதனால்தான் ஸ்வாமி விவேகானந்தர் அவருக்கு குழந்தையாக வந்துள்ளார். அவருடைய மன வலிமைதான் அதற்குக் காரணம். அதனால் அவர் கேட்டது கிடைத்துவிட்டது. உலக ஆசைகளை விடுத்து இறைவன்மேல் மட்டும் ஆசை கொண்டிருக்கின்றதால்தான். அப்பொழுது வாழ்ந்த மனிதர்களுக்கிடையில் அமைதியும் ஒற்றுமையும் மேலோங்கியிருந்தது. ஆனால் மற்ற யுகங்கள் சண்டையும் கலவரமும் போராட்டமும் கொலையும் கொள்ளையும் எல்லாமிருந்தாலும் ஏதோ சில இடங்களில் இறைவனை நேசிக்கின்ற, இறை நினைவுடன் வாழுகின்ற, பிற ஆன்மாக்களிடம் அன்பு கொள்கின்ற இறை உணர்வு நிலையை கைப்பற்றிய மனிதர்கள் இருந்தனர். தற்போதும் இருக்கின்றனர். அவர்கள் சத்திய யுகத்தில் வாழும் மனிதர்களைப் போன்றவர்கள். அவர்கள் இறைவனுக்கு முதலிடம் கொடுப்பவர்கள். அவர்கள் வாழுமிடத்தில் அமைதி நிலவும். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் அசம்பாவிதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் இறைவனின் நினைவில்லாததால்தான்; இறைவனை அறியாததால்தான். இறைவன் இருக்குமிடம், அமைதியும் ஆனந்தமும் தானே. அதில்லாத இடத்தில் மாறான நிகழ்வுகள் நிகழும்.

அதற்கு ஸ்ரீமத் பகவத் கீதையின் கடைசி யில் ஒரு ஸ்லோகம் கீழ்கண்டவாறு உள்ளது.

"யத்ர யோகேஸ்வர : க்ருஷ்ணோ:<br>
யத்ர பார்த்தோ தனுர்த்ர:<br>
தத்ர ஸ்ரீர்விஜயோ ஃபூதிர்<br>
த்ருவா நீதிர்மதிர்ம்மம: "

இந்த ஸ்லோகம் பதிநெட்டு அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ள அத்துனை ஸ்லோகத்தின் பொருளும் இதில் அடங்கும். இதன் பொருள் என்னவென்றால் " எங்கெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணனும் அர்ஜுனனும் ஒன்றாக இருக்கிறார்களோ, அங்கெல்லாம் சகல ஐஸ்வரியங்களும் இருக்கும் என்பதாகும். ஸ்ரீ கிருஷ்ணனை சர்வ வியாபியாகின்ற, பிரபஞ்சத் தந்தையாகின்ற இறைவனாகவும் அர்ஜுனனை .ஜீவாத்மாவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எப்பொழுதும் இறை நினைவிலிருக்கும் மனிதனுக்கு எந்த பயமும் இல்லை என்பதுதான் உண்மை. இறைவன் யாரை அதிகம் விரும்புகிறானோ அவர்களிடத்தில் தன்னுடைய திருவிளையாடலை நிகழ்த்துவான்; நிகழ்த்திக் கொண்டேயிருப்பான். யார் அவனுடைய விளையாட்டுக்குட்படுகிறானோ, அல்லது யார் அவனுடைய அன்பு வலைக்குள் அல்லது பேரன்பு வலைக்குள் செல்கிறானோ அவன் இறைஞான ஊற்று எனும் மிகப்பெரிய பேறு பெற்றவனாகிறான். ஒரு மனிதனுக்கு இதைவிட இவ்வுலகில் வேறு என்ன வேண்டும்? இவ்வாறு ஞான ஊற்று பெறப்பட்ட ஓர் ஆத்மாவிற்கு அவனுடைய வாழ்க்கையில் எவ்வித பயமுமின்றி வாழலாம். எப்பொழுதும் அந்த ஆத்மா இறைவனுடைய பார்வைக்குள் இருக்கும். எப்பொழுதும் அந்த ஆத்மா இறைவன் தொட்டுத் தழுவியவாறு இருக்கும். இறைவனுடனுள்ள உறுதியான நட்பும் நம்பிக்கையும் அல்லது அவனுடன் தீவிர பக்தி அல்லது, அவனை பேசத்தெரியாத ஒரு குழந்தை போன்று எண்ணி அவனிடத்தில் பேரன்பு கொள்வது போன்றவை உண்மையான விடுதலைக்கு வழிவகுக்கிறது.

மேற்கண்ட ஒற்றை ஸ்லோகத்தில் கூறப்பட்டுள்ள ஐஸ்வரியம் எவ்வாறு உண்டா கும் என்றால், தினமும் பகவத் கீதையை படிக்கின்றவர்களும் அதைக் கேட்கின்றவர்களும் எங்கெல்லாம் இருக்கின்றனரோ அங்கெல்லாம் ஐஸ்வரியமும் உண்டு. அதுமட்டுமின்றி பகவத்கீதை பதிநெட்டு அத்யாயங்களில் கூறப்பட்டுள்ள ஞானம் முழுவதும், இதைப்படித்து கடைபிடிக்கின்ற யாராக இருந்தாலும் அவர்களுக்குள் ஒளிரும். படித்தாலோ கேட்டாலோ மட்டும் போதாது, அதில் என்னென்ன விஷயங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதோ அவை அனைத்தையும் கடைபிடிக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். ஒரு வார்த்தையில் இதன் பொருள் கூறவேண்டுமென்றால் 'ஜீவேஸ்வர ஐக்கியம்' எனலாம். இறைவன் (பிரம்மம்) ஆகின்ற யோகேஸ்வரன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனும் வில்லேந்திய ஜீவனாகின்ற பார்த்த (அர்ஜுனன்) னும் எங்கெல்லாம் ஒன்றி ணைந்து இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் அனைத்து ஐஸ்வரியங்களும் உண்டு. அங்கே எதற்கும் குறை இருக்காது. ஒன்றிணைதல் இல்லாதிருக்குமிடத்தில் இறைவனும் ஆத்மாவும் பிரிந்திருக்கு மிடத்தில் அல்லது இறைவனை மறந்த நிலையிலுள்ள மனம் உள்ள இடத்தில் எதுவுமே இல்லை என்பது பொருள்.

இதன் முழுமையானதும் உண்மையானதுமான பொருள் என்னவென்றால், ஓர் ஆத்மா (மனிதன்) மாயை (பொய்) யான உலகப்பொருள் ஆசை களைக் கைவிட்டு உண்மைப் பொருளான பரம்பொருளை (இறைவனை) அறிந்துணர்ந்து அவனை மனதார எப்பொழுதும் உபாசனை (நிர்குணப் பிரம்மோபாசனை) செய்து ஆத்மா பரமாத்மாவுடன் ஒன்றிணைந்து, இறைவனிடத்தில் ஆத்மாவாகின்ற மனிதன் ஸத் சங்கம் செய்து, தன்னுடைய சந்தேகத்தை பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் அர்ஜுனன் தன்னுடைய சந்தேகங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்து தெளிவடைந்து அனைத்தையும் துறந்து இறைவனிடத்தில் சேருவது போன்று கேட்டு நிவர்த்தி செய்து, தெளிவடைந்து, அவன் இறைவனிடத்தில் சேருவதற்கு அல்லது இறைவனாகின்ற பரமானந்தக்கடலில் லயிக்க ஆயத்தமாகின்ற நிலையில் ஒருவன் இருக்கிறான் என்றால், அங்கே இறைவன், அவனை தன்னுடன் சேர்க்கும் பொருட்டு அவனுடனேயே இருப்பான். இறைவனிடத்தில் ஸத் சங்கம் செய்தால் நாளடைவில் எல்லா சந்தேகங்களையும் அவன் தீர்த்து வைப்பான். அவ்வாறு, இறைவன் இருக்குமிடத்தில் என்ன குறையுள்ளது? இது போன்ற மனிதர்கள் எங்கெல்லாம் இருக்கின்றனர்களோ அங்கெல்லாம் அவர்களையும் அவர்களுடன் இருப்பவர்களையும் காக்கும் பொருட்டு அதாவது நெறிமுறையாளர்களான நல்லவர்களைக் காக்கும் பொருட்டு இறைவன் நிச்சயம் அம்மனிதர்களுடன் இருப்பான் என்பதில் துளியும் ஐயமில்லை.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)<br>
Cell No.9894595909

www.aanmeegamalar.com

# ஸ்ரீ வாமன மூர்த்தி

ஸ்ரீமன் நாராயணனின் 5 ஆவது திருஅவதாரம் ஸ்ரீ வாமன மூர்த்தி.

விவஸ்வானுடைய புத்திரன் சிராத்த தேவன் ஏழாவது மனுவாக இருக்கிறார். இந்த மன்வந்த்ரத்தில், ஸ்ரீமன் நாராயணர் கஸ்யபருடைய கடைசி புத்திரராக பாத்ரபத மாதத்திய சுக்ல பக்ஷ த்வாதசி திதியும், ச்ரவண நக்ஷத்திரமும் கூடிய சுப தினத்தில் அபிஜித் என்ற ச்ரவணத்தின் முதல் பாக நக்ஷத்திரத்தில் அதிதி மற்றும் கஸ்யபர் தம்பதிக்கு பயோ விரதத்தின் பலனாய் சங்கு, சக்கரம், கதை மற்றும் தாமரையுடன் பகவான் வாமனர் (குள்ளமான) கருப்பு நிற தேகத்துடனும், மஞ்சள் நிற ஆடையுடனும் அவதாரம் புரிந்தார். மார்பில் ஸ்ரீவத்ச அடையாளம் இருந்தது.

இந்திரனின் பெற்றோர் கஸ்யபர்அதிதி. ஆதலால் வாமனர் இந்திரனுக்கு சகோதரன் முறையாவார்.

ஸ்ரீமன் நாராயணனின் தசாவதாரத்தில் முழுமையான பிராம்மண அவதாரம் வாமன அவதாரம்தான். (பரசுராமர் அந்தணர் குலத்தில் பிறந் தாலும் 21 க்ஷத்ரிய வம்சத்து அரசர்களை அழித்ததனால் நிறைவான பிராம்மண அவதாரமாக நம் நினைவில் இருப்பதில்லை).

இவர் பிறப்பின் பொழுது அநேக சுப சகுனங்கள் தோன்றின.

வாமனருக்கு உபநயனம் செய்யும் பொழுது, சூரிய தேவன் காயத்ரி மந்திரம் உபதேசித்தார். தேவ குரு பிரஹஸ்பதி யக்னோபவீதம் (பூணுல்) அணிவித்தார். கஸ்யபர் மேகலையையும் (ப்ரஹ்மச்சாரி இடை யில் அணியும் முப்புரி கயிறு), பூமி க்ருஷ்ணாஜினத்தையும் (கருப்பு மானின் தோல்), சந்திரன் தண்டத்தையும், மாதாவான அதிதி கௌபீனத்தை மறைக்கக்கூடிய வஸ்திரத்தையும், த்யுலோக மானது குடையையும், பிரம்மா கமண்டலத்தையும், சப்தரிஷிகள் தர்பைகளையும், சரஸ்வதி ஜபமாலையையும், குபேரன் பிக்ஷ பாத்திரத்தையும், உமாதேவி முதல் பிக்ஷை அளித்தாள். அபார பிரம்ம தேஜஸுடன் திகழ்ந்தார். அதனால்தான் அந்தணர் இல்லங்களில் பூணுல் போடுவது தள்ளிப்போனால் ஸ்ரீ வாமன மூர்த்தியை நினைத்தால் உடனே நடைபெறும் என்பது நிதர்சனமான உண்மை.

பகவான் வாமனரின் கால் விரலிலிருந்து உற்பத்தியாகும் கங்கை நீரை சிவ பெருமான் தனது சிரம் மீது தாங்கி கொண்டார். அப்பேற் பட்ட மகிமை பொருந்திய அவதாரம் ஸ்ரீ வாமன அவதாரம்.

ப்ரஹ்லாதனின் பேரனான மஹாபலி சக்ரவர்த்தியின் விஸ்வ ஜித் என்ற மஹாயாகத்தை ப்ருகு குல அந்தணர்கள் மிகவும் விமர்சையாக நடத்தினார்கள்.

100 அசுவமேத யாகங்கள் செய்தால் இந்திரப் பதவியை அடையலாம் என்று முடிவு செய்து யாகங்களைச் செய்யத் தொடங்கினான் மஹாபலி. அவ்வாறு அவன் யாகம் செய்து முடித்துவிட்டால் தேவலோகம் முழுமையும் நிரந்தரமாக அவன் வசமாகிவிடும்



என்பதால் தேவர்கள் அனைவரும் மகாவிஷ்ணுவிடம் சரண் அடைந்து தங்களைக் காக்குமாறு வேண்டினர்.

பகவத் சங்கல்பத்தின்படி அடுத்த மன்வந்தரத் தில்தான் மஹாபலிக்கு இந்திர பதவி. ஆனால் பலி பகவத் சங்கல்பத்தை மீறி சற்று ஆணவ மிகுதியால் நடப்பதை கண்டு மனம் பொறுக்காத ஸ்ரீமன் நாராயணர் அவனது ஆணவத்தை அடக்க வாமனராக சென்றார்.

மஹாபலி நம் நினைப்பது போன்று சாதாரண அசுரன் அல்ல. பகவான் ஸ்ரீ மன் நாராயணனே நேரிடையாக சென்று யாசகம் கேட்டாரென்றால் அவனது கீர்த்தி நமக்கு விளங்கும்.

மஹாபலியின் தனி சிறப்புகள் சில:

மஹாபலி சப்த சிரஞ்சீவிகளில் ஒருவன்.

ப்ரஹ்லாதனின் பேரன்.

அடுத்த மன்வந்த்ரத்தில் இந்திர பதவிக்கு வருபவன்.

இவனின் பாதாள லோகத்தில் ஸ்ரீ மஹா விஷ்ணு வாயில் காப்பானாக இருந்து பாது காத்து வருகிறார்.

இவனின் நினைவாக ஓணம் பண் டிகை கொண்டாடப்படுகிறது.

பகவானாகிய புருஷோத்தமனா கிய நாராயணனுக்கே யாசகம் கொடுத்த கீர்த்திமான்.

கற்பக வ்ருக்ஷத்தைவிட அள்ளி கொடுக்கும் கொடை யாளி.

எப்படி இவனின் பாதாள லோகத்தில் ஸ்ரீமன் நாராயணன் வாயில் காப்பாளனாக உள்ளாரோ, அதேபோல் இவனின் 100 புதல்வர்களில் ஒருவனான பாணாசுரனின் சோணிதபுரத்தில் சிவபெரு மான் வாயில் காப்பாளனாக உள்ளார்.

பகவான் ஸ்ரீ மன் நாரா யணனிற்கு 1000 நாமங்கள் இருந்தாலும் பின்வரும் 24 திருநாமங்கள் ஜபிப்பது மிகவும் புண்ணியம் தரும். அதில் 13 மற்றும் 15 ஆம் திருநாமங்கள் முறையே ஓம் த்ரிவிக்ரமாய நம மற்றும் ஓம் வாமனாய நம என்பது ஸாக்ஷத் ஸ்ரீ வாமன மூர்த்தியை குறிப்பிடுகின்றன என்றால் இதன் மகத்துவம் நமக்கு நன்கு விளங்கும்.

மஹாபலி வாமனரின் திவ்ய தேஜ ஸினால் உந்தப்பட்டு அவரை



எஸ்.ரகுராமன்

முறைப்படி வரவேற்று, தங்களின் வருகையால் தனது வம்சமும், நாடும் அனைத்து மக்களும் புனித மடைந்தோம் மற்றும் தங்களின் விருப்பம் ஏதுவாகினும் அதனை நிறைவேற்றித்தருவதாக வாக்குறுதியும் அளித்தான்.

வாமனர் இதுதான் சமயம் என்றெண்ணி மகாபலியின் மூதாதையர் மற்றும் அவனது வம்சத்தின் சிறப்பையும் கூறி அவனிடம் மூன்றடி நிலத்தை யாசித்தார். இது மிகவும் அற்பமானதால் வேறு ஏதாகினும் உயர்ந்த ஒன்றை தானமாக அளிப்பதாக கூற, வாமனர் தனக்கு மூன்றடி நிலம் போதுமானது என்று கூற, மஹாபலி வேறு வழியின்றி தருவதாக ஒத்துக்கொண்டார். அசுரர் குருவாகிய சுக்கிராச்சார்யர் வந்திருப்பது ஸாக்ஷத் ஸ்ரீமன் நாராயணன் அவசரப்பட்டு வாக்கு அளித்து விடாதே என்று கூறினார்.

ஓம் கேசவாய நம:
ஓம் சங்கர்ஷனாய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் வாசுதேவாய நம:
ஓம் மாதவாய நம:
ஓம் ப்ரத்யும்னாய நம:
ஓம் கோவிந்தாய நம:
ஓம் அனிருத்தாய நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் புருஷோத்தமாய நம:
ஓம் மதுசூதனாய நம:
ஓம் அதோக்ஷஜாய நம:
ஓம் த்ரிவிக்ரமாய நம:
ஓம் லக்ஷ்மி நரசிம்ஹாய நம:
ஓம் வாமனாய நம:
ஓம் அச்சுதாய நம:
ஓம் ஸ்ரீதராய நம:
ஓம் ஜனார்தனாய நம:
ஓம் ஹ்ரிஷீகேசாய நம:
ஓம் உபேநத்ராய நம:
ஓம் பத்மநாபாய நம:
ஓம் ஹரயே நம:
ஓம் தாமோதராய நம:
ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம:

மஹாபலி பகவான் நாராயணனே யாசகம் கேட்டால் எப்படி தர மறுப்பது என்று தூய பாகவத எண்ணத்துடன் தானம் அளிக்க தயாரானான். தனது முதல் அடியில் பூமியையும், இரண்டாவது அடியில் ஆகாசத்தையும், மூன்றாவது அடிக்கு இடமின்மையால் மஹாபலி தனது ஆணவம் அழிந்து தனது சிரத்தின்மீது பகவானின் திருப்பாதத்தை வைக்குமாறு வேண்டினான்.

வாமனர் தனது புனித திருவடியை மகாபலியின் சிரத்தின் மீது வைத்து அவனை பூமியில் அழுத்தி பாதாள லோகத்திற்கு சக்ரவர்தியாக்கி அனுக்கிரஹம் புரிந்தார். என்னே நாராயணரின் காருண்யம். இதனை கண்ணுற்ற தனது பரம பக்தனும் மஹாபலியின் தாத்தாவுமாகிய ப்ரஹ்லாதரை பார்த்து பகவான், சுதலலோகம் சென்று உன்னுடைய பேரனுடன் சந்தோஷமாக வசிப்பாயாக என்றதும், ப்ரஹ்லாதர் பகவானை ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து விடைபெற்று சுதல லோகம் சென்றார்.

வாமனர் பலியிடமிருந்து பூமியை யாசித்து, மூவுலகத்தையும் தனது சகோதரனாகிய இந்திரனுக்கு கொடுத்து அவனுடைய இந்திர லோகத்தையும் மஹாபலியிடமிருந்து மீட்டார்.

இதில் என்னவொரு விந்தை என்றால் ஸ்ரீமன் நாராயணனின் தசாவதாரத்தில், வராஹம், நரஸிம்ஹம், வாமன, ராம, கிருஷ்ண அவதாரங்கள் ப்ரஹ்லாத /மஹாபலியுடன் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. எப்படி என்று பார்த்தால் நமக்கு மிகப்பெரும் ஆச்சர்யமாகவும் அதிசயமாகவும் இருக்கும்.

வராஹம் இரண்யாக்ஷன் வதம் ப்ரஹ்லாதரின் சிறிய தந்தை.

நரஸிம்ஹம் இரண்யகசிபு வதம் ப்ரஹ்லாதரின் தந்தை.

வாமனர் மஹாபலி கர்வ பங்கம் ப்ரஹ்லாதரின் பேரன்.

ராமர் இந்த ப்ரஹ்லாதர் கலியுகத்தில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளாக திருஅவதாரம் புரிந்து மத்வ பீடத்தை அலங்கரித்து மூல ராம பூஜை செய்து தனது ஹரிபக்தியை நிலைநாட்டினார்.

கிருஷ்ண பாணாசுர கர்வ பங்கம் பலிச்சக்ரவர்த்தியின் 100 புதல்வர்களில் மூத்தவன், பெரும் சிவபக்தன்.

வேறு எந்த வம்சத்திற்கும் கிடைக்காத இவ்வரிய நிகழ்வு ப்ரஹலாத வம்சத்திற்கு கிடைத்தது. அதனால்தான் கீதையில் கிருஷ்ணன், அசுரர்களில் நான் ப்ரஹ்லாதன் என்கிறார்.

ஜலமத்யே வராஹம் ச பார்வதி ரகுநந்தனம் !
கமனே வாமனம் சைவ ஸர்வ காலேஷு மாதவம்!!

தாம் அக்ஷீணாம் பலிகிரம் உபாகர்ண்ய காருண்ய பூர்ண: அபி அஸ்ய உத்ஸேகம் சமயிதுமனா: தைத்யவம்சம் ப்ரசம்ஸன் பூமிம் பாதத்ரய பரிமிதாம் ப்ரார்த்தயாம் ஆஸித த்வம் ஸர்வம் தேஹீதி து நிகதிதே கஸ்ய ஹாஸ்யம் நவாஸ்யாத் நாராயணீயம் தசகம் (312)

இப்புண்ணிய சரிதம் கேட்பதும் படிப்பதும் பரம விசேஷம். தேவ, பித்ரு காரியங்கள், ஏகாதசி நடைபெறும் சமயத்தில் படித்தால் மஹா மஹா புண்ணியம்.

– எஸ்.ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593





எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
Gmail இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com





ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
செந்தில்நாதன்

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# மனித இதயம் சுவையானதாய் இருக்க வேண்டும்

என்னுள்ளே உலகம் இருந்தால் என் பெயர் மேதை. உலகினுள்ளே நானிருந்தேன் என்றால் என் பெயர் மனிதன்.

❖❖❖

ஆண்டவனின் வயிற்றுக்குள் உன்னைப் பார். இது சமாதி ஆவதற்கு உண்டான தியானம்.

❖❖❖

கல்வியையும் அறி. உலக வாழ்க்கையையும் அறி. அப்பொழுதுதான் உலக முன்னேற்றம் என்றால் என்ன என்பதே புரியும்.

❖❖❖

குடும்ப வாழ்க்கை என்பது உலக வாழ்க்கை அல்ல.அப்பம் சுடும்பொழுது, இரண்டு பக்கத்தையும் பார்க்கலாம். சுயநலக்காரனையும் உலகம் அழைக்கிறது.

❖❖❖

நூல் நூற்பவனைப் போன்று, ஆண்டவனை ஜபம் செய்து கொண்டே இருந்தால் நூல் சேருவதைப் போன்று அருள்தானே வந்து சேரும்.

❖❖❖

நூல் நூற்றவன், திகம்பரனாய் வேட்டி இல்லாமல் திரிந்ததில்லை.

❖❖❖

டமாரம் அடித்தால் ஒலி கேட்காமல் போகுமா? கேட்கும். பக்தியுடன் "சிவ சிவ" என்று சொன்னால், உனது ஆத்மாவிலிருந்து ஒலியுடன் கேட்பதே கடவுளின் திருநாமம்.

❖❖❖

கோள்கள், கிரகங்கள் நிலை பெயருவது அவைகளின் விபரீத வேலையல்ல; இயற்கையான வேலையே. அதையொட்டி மனிதன் எப்படிச் செயல்பட்டாலும் சிந்தித்தாலும் அது மனிதனின் வேலையே அல்ல.

❖❖❖

கிரகப்பெயர்ச்சி நடக்கும் பொழுது அதில் உனக்கு எண்ணமிருந்தாலும், இல்லாவிட்டாலும் அச்சமயத்தில் ஆண்டவனைத் தொழுதுவிடு.

❖❖❖


கோள்கள், கிரகங்கள் நிலை பெயருவது அவைகளின் விபரீத வேலையல்ல; இயற்கையான வேலையே. அதையொட்டி மனிதன் எப்படிச் செயல்பட்டாலும் சிந்தித்தாலும் அது மனிதனின் வேலையே அல்ல.


❖❖❖


கிரகப்பெயர்ச்சி நடக்கும் பொழுது அதில் உனக்கு எண்ணமிருந்தாலும், இல்லாவிட்டாலும் அச்சமயத்தில் ஆண்டவனைத் தொழுதுவிடு.


❖❖❖

பல தெய்வங்களை வைத்து வழிபடுவது, செத்த மீன்களை வைத்து வியாபாரம் செய்வதைப் போன்றது. உயிருடன் மீன்களை வாங்கி வளர்ப்பது, மனதினுள் ஆண்டவனைப் பார்ப்பதைப் போன்றதே.

❖❖❖

காலம் சரியாக ஓடிக்கொண் டிருக்கிறது. மனிதனுக்கு இதனை கணித்தாலும், கணிக்காவிட்டாலும் என்ன லாபம்? இப்படி பல பொருள்களால் மனிதனுக்கு லாபமில்லை. இதை உடனடியாய்ச் சிந்தித்தால், மனிதன் வீணாக்கும் காலத்தை உடனடியாய்க் குறைப்பான்.

❖❖❖

அல்லி இரவில் மலரும். இதற்கு சூரிய ஒளி தேவையில்லை. 'கடவுள் வேண்டாம். அவன் இல்லாமலே நான் மகிழ்வில் மலர்வேன்'. இப்படி நீ சொல்ல முடியாது. ஜீவன் முக்தனே சொல்வான்.

❖❖❖

மனித இதயம் மாம்பழம் போன்று சுவையானதாய் இருக்க வேண்டும். எண்ணங்கள் சுவையானதாய் அமைந்துவிட்டால், இதயம் மாம்பழமாகிவிடும்.

❖❖❖



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ‘ஒரு கரு உருவாகும் போதே’ அதன் பெயர் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

அன்புள்ள குருஜி அவர்களுக்கு, பணிவான வணக்கம். குழந்தைகளுக்கு பெயர் சூட்டும் போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? பெயரை மாற்றுவதனால் வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளை மாற்றலாமா? முழுப் பெயரை மாற்ற முடியவில்லை என்றாலும், பெயரில் உள்ள எழுத்துக்கள் சிலவற்றை மாற்றுவது மூலம் மாற்றம் வருமா? எல்லோரும் அறிந்து, புரிந்து கொண்டு நடைமுறை படுத்தக்கூடிய விதத்தில் விளக்கம் தருவீர்கள் என்று நினைக்கிறன். உங்கள் பாதங்களுக்கு என் நமஸ்காரம்.

இப்படிக்கு,
ஜெகவீர பாண்டியன், சென்னை.

பெயர் என்பதே ஒரு மந்திரமாகும். நேற்று வரையில் எங்கோ ஒரு மூலையில் கிடந்த மனிதனை பிடித்து வந்து, நாட்டின் தலைவனாக்கி விட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் சில நாட்களிலேயே தனது பழைய நிலையிலிருந்து மாறி, முழுமையான சக்திப் பெற்ற சக்திமான் போல காட்சி தருவான். இது எப்படி நிகழ்கிறது.



ஆயிரம், அதிகாரம்மிக்க பதவி வந்தாலும் மூன்று வேளைக்கு மேல் உணவருந்த முடியாது. அதிகபட்சமாக ஒன்பதுமணி நேரம் உறங்கி ஓய்வெடுத்து கொள்ளலாம். இவைகளால் மட்டும் மனிதனின் சக்தி சில நாட்களில் கூடிவிட போவதில்லை. இன்று தலைவனாகி விட்ட இவனது பெயரை உலகம் முழுவதும் உள்ள பத்திரிக்கைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் அனைத்தும் உச்சரிக்கின்றன. பலகோடி உதடுகள் அவன் பெயரை வாசிக்கின்றன. மனதும் மனதும் அசைபோடுகின்றன. இப்படி ஒரே நேரத்தில் அவனது பெயரை பலபேர் சொல்வதனால் அந்த சொற்களில் உள்ள சக்தி இவனை வந்தடைந்து புதிய தெம்பை, தைரியத்தை, மனத்தெளிவை வெற்றி மிதப்பை கொடுக்கிறது. அது தான் இரகசியம். உதாரணத்திற்கு உங்கள் பெயரையே தினசரி சுவாமியின் பெயரை ஜெபிப்பது போல ஜெபித்து பாருங்கள். நல்ல மாற்றங்கள் ஏற்படுவதை காண்பீர்கள்.

நாம் நினைப்பது போல, பெயர்கள் செயற்கையாக சூட்டப்படுவது கிடையாது. நாடி ஜோதிட கணக்குப்படி ஒரு கரு உருவாகும் போதே, அதன் பெயர் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. ஒற்றைப் பெயரை பெறுவதாக இருக்கட்டும். பல பெயர்களை அவனுக்கு தருவதாக இருக்கட்டும். எல்லாமே நிச்சயிக்கப்பட்ட படியே நடக்கிறது. சில நல்ல அதிர்ஷ்டசாலிகளுக்கு நல்ல சரியான பெயர் இயற்கையாகவே முதலில் அமைந்து விடுகிறது அல்லது இடைப்பட்ட காலத்தில் கிடைத்துவிடுகிறது. பலருக்கு வாழ் நாள் முழுவதுமே சரியான பெயர் கிடைப்பதில்லை. இதை அவரவர் தலையெழுத்து, விதி என்று தான் கூற வேண்டும். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், இடைப்பட்ட காலத்தில் பெயரை மாற்றிக் கொள்வது தவறல்ல. அது நல்ல பெயராக, நமக்கு ஏற்ற பெயராக அமைய வேண்டும் என்பது தான் முக்கியத் தேவையாக இருக்கிறது. அடுத்தது நம் பெயரை எப்படி மற்றவர்கள் அழைக்கிறார்களோ எப்படி நாம் நம்மை அறிமுகம் செய்து கொள்கிறோமோ அப்படியே தான் எழுத்தில் எழுத வேண்டும். எழுத்தில் மாற்றினால், மாற்றிய எழுத்துப்படியே வார்த்தையை உச்சரிக்க வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால், செய்ய முடியாது என்றால் எழுத்தை மாற்றுவதனால் எந்த பயனும் கிடையாது. இதை முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டும்.

குழந்தைகளுக்கு பெயர் வைக்கும் போது, அர்த்தம் இல்லாத பெயர்கள், விசித்திரமான வாயிற்குள் நுழைய முடியாத பெயர்கள், பெரிய தலைவர்களின் பெயர்கள் இவற்றை வைக்க கூடாது. அப்படி வைத்தால் அந்த பெயர்களில் உள்ள உச்சரிப்பு முறை குழந்தைக்கு கிடைக்காமல், அவர்களது வாழ்க்கையை திசை மாறிய கப்பலாக மாற்றிவிடும்.

அர்த்தபுஷ்டியான பெயர், அழகான மொழி நடையில் எளிமையாக உச்சரிக்க கூடிய பெயர்கள் இவற்றையே வைக்க வேண்டும். தெய்வங்களின் பெயர்களை வைப்பதில் எந்த தவறும் இல்லை. ஆனால், அந்த தெய்வ பெயர்கள் காலத்திற்கு ஏற்ற பெயர்களாக இருக்க வேண்டும்.

கிருஷ்ணன் என்ற பெயரில் எனக்கு ஈர்ப்பு இருக்கிறது. என் குழந்தைக்கு வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால், கிருஷ்ணன் என்பது சமஸ்கிருதம். நானோ சுத்த தமிழில் பெயர் வைக்க விரும்புகிறேன் என்ற எண்ணத்தில் கருப்பன் என்று தமிழ்படுத்தி பெயர் வைத்தால், அது மூலத்தை மட்டுமல்ல. குழந்தையினுடைய மன இயல்பையும் மாற்றிவிடும். சிலர் கிருஷ்ணனை, கிருட்டிணன் என்று தமிழாக்கம் செய்கிறார்கள். இது தவறு. கிருஷ்ணன் என்பது வடமொழி பெயராக இருந்தால், அல்லது வேறு எந்த மொழி பெயராக இருந்தாலும் அந்தந்த மொழியாகவே அது இருக்க வேண்டுமே தவிர நம் இஷ்டத்திற்கு மாற்றக்கூடாது. மேலும் குழந்தைக்கு ஞானவேல் என்று அழகான முருகன் பெயரை வைத்துவிட்டு, அவனை அட அசடே என்று அழைக்க கூடாது. அது குழந்தையை மட்டுமல்ல முருகனையும் அவமரியாதை செய்வதாகும்.

சுவாமிஜி அவர்களுக்கு, வணக்கம். இந்த வாரத்தில் முதல் நாள் எனக்கொரு கனவு வந்தது. அந்த கனவை கண்ட தினத்திலிருந்து மனதில் பயமும், பதற்றமும், தடுமாற்றமும் ஏற்படுகிறது. என்ன கனவு என்று கேட்டால் இதெற்கெல்லாமா கவலைப்படுவது என்று மற்றவர்கள் என்னை ஏளனம் செய்வார்கள். ஆனால், நீங்கள்


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 அக்டோபர் 2020 29
www.aanmeegamalar.com

அப்படி செய்ய மாட்டீர்கள் என்னை புரிந்து கொள்வீர்கள் என்று நினைத்து, இந்த மின்னஞ் சலை அனுப்புகிறேன். அந்த கனவில் என் தலைமுடி எல்லாம் நரைத்து, வயதானவள் போல ஆகிவிட்டேன். இருபத்து மூன்று வயது பெண் தலை நரைத்தவளாக இருந்தால் எவ்வளவு கொடுமையாக இருக்கும்? என் வாழ்க்கை எத்தகைய சோதனைக்கு உள்ளாக்கப்படும் என்பதை நினைக்க, நினைக்க கனவு பலித்துவிடுமோ என்ற அச்சம் என்னை சாகடிக்கிறது.




தயவு செய்து இந்த கனவிற்கு பலன் சொல்லுங்கள். நரைத்தே தான் தீரும் என்றாலும் வெளிப்படையாக கூறுங்கள் என் மனதை அதன் படி தேற்றிக் கொள்கிறேன். உங்கள் பதிலுக்காக காத்திருக்கிறேன்.

இப்படிக்கு,
பத்மஜா, நியூ டெல்லி.

ஆண் பிள்ளைகளே தலைமுடியின் மீது தீராத காதல் வைத்திருக்கும் போது பெண் குழந்தைகளின் மனதை பற்றி சொல்லவே வேண்டாம். அறுபது வயதை கடந்தாலும் கூட, வெளுத்த முடியை மறைப்பதற்கு படாத பாடுபடுகிற சீமாட்டிகள் பல பேரை தினசரி பார்க்கிறோம். இதில் மிக இளம் வயது பெண் எப்படியெல்லாம் மனதளவில் சங்கடப்படுவாள் என்பதை நினைத்து பார்த்தாலே வருத்தமாக இருக்கிறது.

ஆனால், இதில் வருத்தப்பட ஒன்றுமே இல்லை. அதற்கு முதல் காரணம் தலையில் நரைப்பதாக கனவு வந்திருக்கிறதே தவிர அதற்கான வேறு எந்த அறிகுறியும் இல்லை. கனவுகள் எல்லாம் நடந்து தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

இந்த பெண் தனது கூந்தலை அளவுக்கு அதிகமாக நேசிப்பதனால் இந்த மனக்குழப்பம் ஏற்பட்டிருக்கும் என்று ஒரு பெண்ணின் அழகு என்பது அவள் தலைமுடியில் இல்லை. அவளது அறிவிலும், தெளிவிலும், பண்பிலும் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டால் பெண்ணடிமைத்தனம் மறையும் என்பது என் எண்ணம்.



என் உபதேசம் ஒருபுறம் இருக் கட்டும். கண்ட கனவுக் கான பலனை கூறுவதுதான் என் முக்கிய வேலை என்று நினைக்கிறேன். தலைமுடி நரைப்பது போல கனவு வந்தால், குடும்பத்தில் புதிய உறுப்பினர் ஒருவர் வரப்போகிறார் என்பது அர்த்தமாகும். அதாவது இந்த பெண்ணின் சகோதரிக்கோ, சகோதரனுக்கோ குழந்தை பிறக்கப் போவதாக கூறலாம். இதுஆறு மாதத்தில் நடக்கும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



# பிணையாக பிராட்டியை பிடித்துவைத்த அனந்தாழ்வார்!



பகவத் ராமாநுஜரின் உத்தரவின்படி திருமலையில் தங்கிப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் அனந்தாழ்வார். ஒரு நந்தவனம் ஏற்படுத்தி, அன்று அன்று பூத்த மலர்களைப் பறித்துத் தொடுத்து பெருமாளுக்கு அணிவிப்பது வழக்கம்.

ஒருநாள் இரவு அனந்தாழ்வார் நந்தவனத்துக்குச் சென்றபோது, நந்தவனத்தில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இருப்பதைக் கண்டார். அவர்களைப் பிடிப்பதற்காக அனந்தாழ்வார் வேகமாகச் சென்றபோது, அந்த ஆண் தப்பி ஓடிவிட்டான். பெண் மட்டும் அகப்பட்டுக் கொண்டாள். தப்பி ஓடிய ஆண் மகன் வரும்வரை அந்தப் பெண்ணை நந்தவனத்திலேயே பிணையாகப் பிடித்து வைத்திருந்தார் அனந்தாழ்வார்.

பொழுதும் விடிந்தது. வழக்கம்போல் அன்று மலர்ந்த மலர்களை மாலைகளாகத் தொடுத்து எடுத்துக்கொண்டு வேங்கடவனின் சந்நிதியை அடைந்தார். சந்நிதியில் பெருமாளின் திருமார்பில் அலர்மேல்மங்கை நாச்சியார் இல்லாதிருப்பது கண்டு கலங்கிக் கதறித் துடித்தார்.

அவருடைய கவலையைப்போக்கும் வகையில், 'நேற்று இரவு நாமே பிராட்டியுடன் உன் நந்த வனத்துக்கு வந்தோம். நீ பிணையாகப் பிடித்து வைத்திருக்கும் பெண் வேறு யாருமில்லை. அனைத்துலக உயிர்களுக்கும் அன்னையாகிய அலர்மேல்மங்கை நாச்சியார்தான்' என்று தெரிவித்தார்.

அதைக் கேட்ட அனந்தாழ்வார், ஒரு விநாடிகூட ஐயனைப் பிரியாத அன்னை, தன் செயலின் விளைவாக ஓர் இரவு முழுவதும் பிரிய நேரிட்டதை எண்ணி மிகவும் வருத்தம்கொண்டார். அதற்கு ஈடுசெய்யும் விதமாக அவரே நாச்சியாரின் தந்தையாக இருந்து மறுபடியும் நாச்சியாரைப் பெருமாளுக்குத் திருமணம் செய்து வைத்தார். அதன் காரணமாக அனந்தாழ்வார் பெருமாளுக்கு மாமனார் என்று சிறப்பிக்கப்படுகிறார்.

❖ பெருமாள் கோவிலில் உள்ள கருடாழ்வார் சந்நிதியை சுற்றி வந்து நெய்விளக்கு ஏற்றி வழிபடசர்ப்ப தோஷம், கால சர்ப்ப தோஷம் நீங்கும்.

❖ தொழில் தடை, கணவன் மனைவிக்கு கருத்து வேறுபாடு நீங்க, வாழ்வில் நலம் பெற, வெளிநாட்டு வேலை முயற்சி வெற்றி பெற, என்று நல்ல காரியங்கள் நடைபெற பௌர்ணமி தோறும் கிழக்கு பார்த்து இருக்கும் அம்மன் கோவில் பூஜையில் கலந்து கொள்வது நற்பலன்களைத் தரும்.

❖ தினமும் ஆதித்ய ஹ்ருதயம் பாராயணம் செய்வது மிக, மிக நன்மை தரும். வாழை தண்டு திரியினால் வீட்டில் தீபம் ஏற்றினால் குலதெய்வ குற்றமும், குலதெய்வ சாபமும் நீங்கும்.

# பரிசு கொடுத்தல் மற்றும் வாங்குதல்

## ஓர் ஆன்மீக கண்ணோட்டம்

பரிசு கொடுப்பது மற்றும் வாங்குவது என்பது பலதரப்பினிடத்தும் உள்ள ஒரு வழக்கமாகிவிட்டது. ஆன்மீக பரிமாணத்தில் பரிசு கொடுத்தல் மற்றும் வாங்குதல் மூலம் நாம் மற்றவரை பற்றி நினைப்பதால், நம் அஹம்பாவம் குறைகிறது. எதிர்பார்ப்பில்லாது கொடுக்கப்படும்போது மேலும் நன்மை கிடைக்கின்றது. அதேபோல், பரிசை வாங்கிக் கொள்ளும்போதும் நன்றியுணர்வோடும் நம் விருப்பு வெறுப்புகளை நீக்கியும் பெறுவதால் நம் அஹம்பாவம் குறைகிறது. இதுவே இதன் ஆன்மீக பலன்.

**கர்ம விதிப்படி, நாம் பரிசு கொடுக்கும்போதும் வாங்கும்போதும்**

1. இன்னொருவருடன்கொடுக்கல் வாங்கல் கணக்கை முடிக்கிறோம் அல்லது புதிதாக ஏற்படுத்துகிறோம்.
2. பரிசின்தன்மைப்படியும்நோக்கத்தின்படியும் புண்யபலனோபாவபலனோஏற்படுகிறது.
3. இந்தகொடுக்கல் வாங்கல் கணக்கால் ஏற்படும் புண்ய அல்லது பாவ பலன், நம்மை பிறப்புஇறப்பு சக்கர சுழற்சியில் சிக்க வைக்கிறது. அதாவது ஒருவருக்கு பரிசு வாங்குவதன் மூலம் கிடைக்கும் புண்ய பலனால், இந்த பிறவியிலேயோ அல்லது அடுத்த பிறவியிலேயோ அவரிடமிருந்து அதே அளவுள்ள மகழ்ச்சியைத் திரும்ப பெற வேண்டும்.நாம் சேர்த்து வைத்த அத்தனை கணக்கையும் முடிந்தா லொழிய பிறப்பு இறப்பு சக்கர சுழற்சியிலிருந்து தப்பித்து நாம் பிறந்த நோக்கத்தை அடைய முடியாது.

**பரிசு பரிமாறிகொள்வதன் மூலம் கொடுக்கல் வாங்கல் கணக்கில் மாட்டிக் கொள்ளாமலும், புண்ய, பாவ பலனை சேர்க்காமலும் இருப்பது எப்படி?**

1. நம் எல்லோருக்குள்ளும் இறை தத்துவம் உள்ளது. அதையே ஆத்மா என்கிறோம். நாம் இந்த உணர்வில் தோய்ந்து நமக்குள் உறையும் இறைவனை உணர்ந்து செய்யப் படும் எந்த செயலும் கர்ம பந்தத்தை ஏற்படுத்துவதில்லை.
2. நம்நாமஜபம்தொடர்ந்துநடைபெற்று, மிக உயர்ந்த தரத்தோடு விளங்கும்போது செய்யப்படும் செயலும் கர்ம பந்தத்தை ஏற்படுத்துவதில்லை.
3. நாம்பரிசுகொடுக்கும்போதும் வாங்கும் போதும்நமக்குள்ளிருக்கும்இறைவன், இன் னொரு வருக்குள் இருக்கும் இறைவனுக்கு கொடுக்கிறார் அல்லது வாங்குகிறார் என்ற உணர்வோடு செய்யும் செயலும் கர்ம பந்தத்தை ஏற்படுத்தாது.
4. எதிர்பார்ப்பில்லாமல்பரிசுபரிமாற்றம்நிகழும் போதும்கர்மபந்தம்ஏற்படுவதில்லை.




**எந்த மாதிரியான பரிசை தேர்வு செய்ய வேண்டும்?**

பரிசை தேர்வு செய்யும்போது நாம் நினைவில் கொள்ளவேண்டியவை:

ஞானதானம்: ஆன்மீகத்தைப் பற்றியும், ஆன்மீக பயிற்சியைப் பற்றியும் ஞானத்தை வழங்கும் பொருட்களைப் பரிசாக வழங்குவதே மிக உயர்ந்த தானமாகும்.

கிழ்கண்ட அட்டவணை மூலம் இதை பற்றி மேலும் தெரிந்து கொள்வோம்.

- பரிசுபரிசின் கால அளவு
- மலர்கள் சில மணிநேரங்கள்
- உணவு பொருட்கள் சில நாட்கள்
- உடைசில மாதங்கள்
- மின்னணுப் பொருட்கள் சில வருடங்கள்
- நகை பல வருடங்கள்
- ஆன்மீக நூல்கள் இந்த பிறவி மற்றும் ஏனைய பிறவிகள்

**ஸாத்வீக பரிசும் அஸாத்வீக பரிசும்:**

ஸாத்வீக பரிசு பொருட்களான ஆன்மீக நூல்கள், ஆன்மீக நிவாரணமளிக்கும் ஸாத் வீக ஊதுபத்திகள், சனாதன் பஞ்சாங்கம் (காலெண்டர்), ஜபமாலை, நாமஜபம் கொண்ட சிடிக்கள், போன்றவை ஒருவரின் மனதை உள்முகப்படுத்தி ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவுகிறது. ராஜஸீக தாமஸீக பரிசு பொருட்கள் மனதை வெளி முகப்படுத்தி, ஆன்மீக முன்னேற்றத்தை தடை செய்கிறது.

தீபாவளி, பொங்கல், புத்தாண்டு, நவராத்திரி போன்ற விசேஷ நாட்களில் ஸாத்வீக பரிசு பொருட்கள் கொடுப்பதால் அதை கொடுப்பவர் மற்றும் வாங்குபவர் இருவரும் பயன் பெறுகின்றனர்.

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626

# நான்கு யுகங்களும் ஸ்வஸ்திக்கும்



இதுவரை ஸ்வஸ்திக் சின்னம்என்றால் ஒருலாபகரமான, வெற்றி யடையவைக்கும் ஒரு நம்பிக் கைக்குரிய சின்னம் என்றுதான் நாம் அறிந்திருக்கிறோம் ஆனால் அந்த ஸ்வஸ்திக் சின்னத்திற்குள்அகில அண் டங்களும் அடங்கியுள்ளது என்பதை பெரும்பாலும் நாம் அறியாமல் இருக்கிறோம்.

இந்த ஸ்வஸ்திக்கினுடைய பாகங்கள் 4 ஒன்றுக் கொன்று சரி சமமாக 4 பிரிவுகளாக உள்ளது.. இந்த 4ம் நான்கு யுகங்களை குறிக்கும். நான்கு யுகங்களும் சரி சமமான பாகங்கள். ஒவ்வொரு யுகமும் 1250 வருடங்கள். நான்கு யுகங்களும் சேர்ந்து 5000ம் வருடங்கள். இந்த 5000ம் வருடங்களில் 2500 வருடங்கள் சுவர்க்கம். பிற்பகுதி 2500 வருடங்கள் உலகம் மெல்ல... மெல்ல.. கீழிறங்கி வருகின்றது. இந்த நான்கு யுகங்கள் முறையே **சத்யுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்** என்றழைக்கப்பட்டு.. ஒவ்வொரு 5000ம் வருடங்களும் திரும்பத் திரும்ப இந்த பிறவி சக்கரம் இப்படியே சுற்றிவருகின்றது. இதில்தான் மனிதசரித்திரம் அரங்கேறுகின்றது அதாவது நாம் இப்பொழுது கலியுகத்தின் இறுதியில் இருக்கின்றோம். இந்த நேரத்தில் தான் அனை வரும். அனைத்து தர்மத்தினரும் இறைவனை நோக்கி கூப்பிட ஆரம்பிக்கின்றனர்.

ஏனென்றால் கலியுகத்தின் இன்னொரு பெயர் முழு கொடூரமான நரகம், அப்படியானால், மனிதனிடம் தீய செயல்கள் அதிகரித்து, நன்மையும், புண்ணியகாரியங்களும் குறைந்து பாவத்தின் மீது மனிதனுக்கு நாட்டம் அதிகரித்து செல்லும் யுகம் கலியுகம். இந்த கலியுகத்தில் அனைத்து தர்மமும் கீழான நிலை அடைந்து அதர்மத்தின் வசமாகின்றது.

இவ்வளவு அற்புதமான ஒரு கால நிலையை ஸ்வஸ்திக் குறியீட்டில் அடங்கியிருக்கிறது.


ஆன்மிகமலர் மெயில் புக்

# அன்னையின் நினைப்பு

உலகையே துறந்துவிட்ட ராமதாஸருக்கு ஒருநாள் தன் அன்னையின் நினைப்பு வந்ததுஞ் வீட்டை விட்டு ஓடி வந்ததை நினைத்துப் பார்த்தார். மறுபடியும் தன் அன்னையை காண வேண்டுமென்கிற நல்லாசை அவருக்குள் கிளை பரத்தியது. உடனே தாயைக் காண ஓடிச் சென்றார் அந்தத் தவத் தனயன்.

தனது பழைய வீட்டைக் கண்டுபிடித்தார். வாசலில் நின்று, ""ஜய ஜய ரகுவீர ஸமர்த்த" என்று உரத்த குரலில் சொன்னார். திண்ணையில் உட்கார்ந்திருந்த அவருடைய வயதான தாயார், ""யாரோ பிச்சை கேட்டு வந்திருக்கான். எதாவது போடுங்க" என்று வீட்டுக்குள் இருந்தவர்களிடம் சொன்னாள்.

உடனே ராமதாஸர், ""அம்மா! நான் உன்னோட "நாரோபா' வந்திருக்கேன்மா. (ராமதாஸரை அவருடைய அம்மா இப்படித்தான் செல்லமாக அழைப்பார்.) உன்னைப் பார்க்கணும்னுதான் வந்தேன்" என்று அன்புப் பெருக்கோடு கூறினார்.

எத்தனையோ வருடங்களுக்கு முன் வீட்டை விட்டு ஓடிய பிள்ளை மறுபடியும் வந்து நிற்பதை உணர்ந்த ராணுபாய் கண்ணீர்க் காடாக மாறினாள்; தட்டுத் தடுமாறி வந்து பிள்ளையைக் கட்டியணைத்தாள்; தோளையும், மார்பையும், முகத்தையும் தடவித் தடவிப் பார்த்துப் பரவசப்பட்டாள். ஆம், காலம் அவளுடைய கண்பார்வையைப் பறித்திருந்தது.

"என் செல்லமே! என் பட்டே! என் கண்ணே நாரோபா! இத்தனை வருஷங்கள் கழித்து வந்திருக்கும் உன்னைக் கண்ணாரப் பார்க்க எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே? நான் பார்வையில்லாத கிழமாகிவிட்டேனே'' என்று கதறினாள்.

ராமதாஸரின் துறவு நெஞ்சுகூட ஒரு நிமிடம் துடிதுடித்துப் போனது. தனது இஷ்ட தெய்வமான ரகுவீரரை நினைத்து தாயின் கண்களைத் தொட்டார். அடுத்த நிமிடம், ராமதாஸரைப் பெற்றெடுத்த அந்தப் புண்ணியவதிக்கு பார்வை வந்துவிட்டது. கண்ணாரத் தன் மகனைக் கண்டாள்; கட்டித் தழுவினாள்.

அதற்குப் பின் சில நாட்கள் தன் தாயுடனேயே கழித்த ராமதாஸர், மறுபடியும் உலகில் தர்மத்தைப் பரப்ப புறப்பட்டுவிட்டார். மகனைப் பிரிய மறுத்த தாயிடம், ""உன் இறுதிக் காலத்தில் இங்கே வருவேன்'' என்று வாக்களித்தார்; அப்படியே செய்தார்.

அற்புதங்கள்

தன் வாழ்நாட்களில் பல அற்புதங்களைச் செய்து காட்டினார் ராமதாஸர்.

❖ தன் அன்னைக்கு மட்டுமல்ல, மன்னார் குடியைச் சேர்ந்த ஒரு சிற்பிக்கும் இழந்த பார்வையை மீண்டும் அளித்து சிற்பங்களைச் செதுக்க வைத்தார்.

❖ கிணற்றில் விழுந்துவிட்ட ஒரு இளைஞனை தன் தவ வலிமையால் உயிரோடு மீட்டுத் தந்தார்.

❖ படிப்பறிவற்ற ஒரு பாமரனுக்கு ஞானம் அளித்து, தன்னோடு வாதம் செய்ய வந்த பண்டிதரோடு அவனை சொற்போர் நிகழ்த்த வைத்து, பண்டிதரின் கர்வத்தை அடக்கினார்.

❖ தஞ்சைக்கு வருகையில் கண்களை இழந்த ஸ்தபதிக்கு கண்ணொளி தந்திருக்கிறார். அந்த ஸ்தபதி மூலம் கல்லில் அழகிய இராமர் பட்டாபிஷேகச் சிலைகனைச் செய்ய வைத்து தமது பூஜையில் அவற்றை வைத்திருந்திருக்கிறார். இந்த சிலா விக்கிரஹங்கள் ஸஜ்ஜன் காட் என்னும் இடத்தில் ராமதாஸர் சமாதிக்கருகில் கோவிலில் வைத்து ஆராதனை செய்யப்படுகிறது.

❖ ஒரு வாலிபன் அகால மரணமடைகிறான். அவன் மனைவி ராமதாசரை கண்டு கண்ணீருடன் வணங்க, இவரும் அவளது நிலையறியாது அவளுக்கு பிள்ளைப் பேற்றினை ஆசிர்வாதிக்கிறார். திகைத்துப் போன பெண் தன் நிலையைக் கூறி தாம் தன் கணவனுடன் உடன்கட்டை ஏறவே சென்றுகொண்டு இருப்பதாகக் கூறுகிறாள். ஸ்வாமிகளோ, ஸ்ரீ ராமர் அருளால், இந்த ஜன்மத்திலேயே உனக்கு பிள்ளை பிறக்கும் என்று கூறுகிறார். பின்னர் அந்த பெண்ணுடன் தானும் சுடுகாட்டுக்குச் சென்று மந்திர உச்சாடனம் செய்து தீர்த்தத்தை சடலத்தின் மீது தெளிக்கிறார். அந்த ஆண்மகன் தூக்கத்தில் இருந்து முழிப்பது போல எழுகிறான். இருவரும் ராமதாசரை வணங்கிச் செல்கின்றனர். இவர்களுக்குப் பிறக்கும் மகனே பிற்காலத்தில் உத்தவர் என்ற பெயர் பெற்று ராமதாசரின் முதன்மைச் சீடராகிறார்.

(ஸ்வீ) பீஜப்பூர் சுல்தானால் கைது செய்யப்பட்ட ஒரு அப்பாவி கணக்கரை தன்னுடைய மகிமையால் விடுவித்தார்.

## முக்தி

பக்தியை பரப்பிய ராமதாசர் தன்னுடைய அந்திமகாலம் நெருங்குவதை அறிந்து பக்தர்களுக்குத் தெரிவித்தார். நாடெங்குமிருந்து அவருடைய பக்தர்கள் அவரை சூழ்ந்து கொண்டனர்.

ராம்தாஸ் மாகின் ஒன்பதாம் நாளில், 1603 (ஷாலிவஹன சகாப்தம்), பொ.ச. 1681 இல் சஜ்ஜங்காட்டில் 73 வயதில் இறந்தார். இதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு அவர் பழங்களை சாப்பிடுவதையும், "பிரயோபவேஷனா" என்று அழைக்கப்படும் குடிநீரையும் நிறுத்திவிட்டார். தஞ்சையில் இருந்து கொண்டுவரப்பட்ட ராமின் மூர்த்திக்கு முன்னால் துளசிமணி மாலை அணிந்து கொண்டு பத்மாசனமிட்டு ராமதியானத்தில் அமர்ந்தார். ராமர் அவர் முன் காட்சியளித்தார். "ஜயரகுவீரா' என்று ஜபித்தபடியே அவர் உயிர் தனது 73ம் வயதில் [1681ல்) பிரிந்தது. உத்தவ் சுவாமியும் அக்கா சுவாமியும் அவரது சேவையில் இருந்தனர்.

இறுதி சடங்கை உத்தவ் சுவாமி நிகழ்த்தினார். சமாதி சன்னதி சத்ரபதி சம்பாஜி மகாராஜால் கட்டப்பட்டது.

"ஸ்ரீ ராம ஜய ராம ஜய ஜய ராம"
ஸ்ரீராம ஜயம்

நிறைவுபெற்றது

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593





எஸ்.ரகுராமன்

சமர்த்த ராமதாசர் வரலாறு (பாகம்-7)

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# ஆன்மீக வழியில் அமைதி

3

ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று புத்தர் போதித்தார். மனிதன் தன்னுடைய அனைத்து ஆசைகளையும் அழிப்பதன் மூலம் துன்பங்களை ஒழிக்கலாம் என்று கூறினார். நேர்மையான எண்ணங்கள், பேச்சு, செயல்கள் மூலம் துன்பங்களை முற்றிலும் அழிக்கலாம் என்று ஆசையைஒழிப்பதற்கான வழிமுறைகளையும் புத்தர் கூறியுள்ளார். நாம் மனதில் எப்பொருள் மீதும் ஆசைப் படக்கூடாது என்ற வைராக்கியத்துடன் இருந்து விட்டால் துன்பத்திலிருந்து விடுதலை பெறலாம். நம் மனதில் தோன்றும் ஆசையை முளையிலே கிள்ளி எறிந்துவிட்டால் நாம் விரும்பும் அமைதி தானே வந்து விடும்.

நமது வாழ்க்கைத் தத்துவங்களை, ஆன்மீகக் கருத்துக்களை எளியமுறையில் அறிந்து கொள்வதற்கு பல நூல்கள் உள்ளன. வேதாந்தத்தில் கூறப்படும் கருத்துக்களை பொதுவாக ‘புருஷார்த்தம்’ என்று கூறப்படுகிறது. புருஷார்த்தம் என்பதில் ‘புருஷக.’ என்றால் மனிதன் என்பதாகும். ‘அர்த்தம்’ என்றால் இந்த இடத்தில் இலக்கு அல்லது இலட்சியம் என்று பொருள் கொள்ள வேண்டும். பொதுவாக மனதை உடையவன் மனிதன் என்றும் அழைக்கப் படுகிறான்.

உலகில் மனிதர்களுக்கு மட்டும்தான் சிந்திக்கும் ஆற்றல் இருக்கிறது. அதனைச் செயல்படுத்துவதற்குத் தேவையான ஆற்றலும் அவனுக்கு இருக்கிறது. மனிதனைத் தவிர விலங்குகள், பறவைகள், ஊர்வன போன்ற அனைத்து உயிரினங்களுக்கு, சிந்திக்கும் ஆற்றலோ, எண்ணியதை செயல்படுத்தும் ஆற்றலோ அவைகளுக்கு இல்லை. உலகில் காணப்படும் விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்கள் அனைத்துக்கும் மனிதனைப்போல் இலட்சியம் குறிக்கோள் போன்றவை இல்லை. சிந்திக்கும் ஆற்றல் மனிதனுக்கு மட்டும் இருப்பதால், நன்மை எது தீமை எது என்று சிந்தித்து செயல் புரிவதற்கு முடியும். அதனால் நாம் மன அமைதி பெறுவதற்கு முடியும்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அவனையறியாமல் ஒரு லட்சியம் இருக்கிறது. அவன் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அதனை உணரமுடியும். அவனுடைய மனதில் அவனையும் அறியாமல் ஒரு பொருளின் மீதோ, செயலின் மீதோ தோன்றக்கூடிய மன உறுதியை, தீர்மானத்தை மனிதனுடைய லட்சியம் குறிக்கோள் என்று கூறப்படுகிறது. இந்த உலகத்தில் மனிதனால் மட்டும்தான் ஒரு இலட்சியத்தை நினைக்கவோ அதன் இலக்கை அடையவோ, நிர்ணயப்பதற்கும் முடியும். ஆனால் விலங்குகள், பறவைகள், ஊர்வன போன்ற உயிரினங்களுக்கு இலட்சியம் பற்றி நினைக்கவோ செயல்படுத்தும் நிலையோ, பகுத்தறியும் தன்மையோ அவைகளுக்கு இல்லை. தங்கள் உடல், உள்ளத்தின் மூலம் ஆன்மீக பயிற்சி பெற்று, மனதால் உணர்ந்து, ஆன்மீக சாதனைகள் புரிவதற்கு மனிதர்களால் மட்டும் முடியும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு இலட்சியம் அவனையும் அறியாமல் இருந்துகொண்டு, அவனது வாழ்க்கையை ஏதோ ஒரு வழியில் நடத்திக் கொண்டுதான் செல்கிறது. ஒரு மனிதன் அறிந்தும் அறியாமல் அவனையும் அறியாமல் ஏதோ ஒரு செயலைச் செய்துகொண்டுதான் இருக்கிறான். அவன் உடல் அளவில் சில நேரங்களில் செயல்பாடு இல்லாமல் இருக்கலாம்.

ஆனால் ஒவ்வொரு மனிதனும் மனதிற்குள் ஏதாவது ஒரு சிந்தனையில் இருந்து கொண்டுதான் இருப்பான். அவன் உடல் அளவில் அல்லது மனதளவில் ஒரு செயலை அவன் செய்வதற்கு ஏதாவது ஒரு காரண காரியம் இருக்கும்.

எடுத்துக்காட்டாக ஒருவன் நூலகத்திற்குச்செல்கிறான் என்று வைத்துக் கொள்வோம்.அவன் நூலகம் செல்வதற்குக் காரணம் செய்தித்தாள்கள் மற்றும் புத்தகங்களை படிக்கும் நோக்கத்துடன்தான் அங்கு செல் வான். அவன் நூலகம் செல்வதற் குக் காரணம் பெரும்பாலும் படிப்பதற்கு என்ற நோக்கம்தான் காரணமாக இருக்கும். இதேபோல்தான் ஒவ்வொரு செயலையும் சிந்தித்துப் பார்த்தால் மனிதன்





ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணகாரியம் இருக்கும். மனிதர்களுக்கு எந்தவொரு காரணம் இல்லாமல் காரியம் என்பது எதுவும் இல்லை. உலகில் வாழும் எந்த ஒரு மனிதனும் தன்னோட செயலுக்கு காரணம் 'எதுவும் இல்லை' என்று மறுத்துக் கூறுவதற்கு முடியாது. பொதுவாக சிந்தித்துப் பார்த்தால் ஒருவன் வாழ்வில் எந்தவித குறிக்கோள்கள் நோக்கமில்லாமல் செய்யக்கூடிய செயல்கள், அர்த்தமற்ற பேச்சுக்கள் அவனது வாழ்வில் எந்தவிதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை.

விலங்குகள், பறவைகள், ஊர்வனபோன்ற உயிரினங்களைப் பொறுத்தவரை மனிதனைப்போல அவைகளுக்கு இலக்கு, இலட்சியம், சிந்தனை போன்ற காரணகாரியங்கள் எதுவும் இருப்பதில்லை. எடுத்தக்காட்டாக ஒரு தெரு நாய் அங்கும் இங்கும் திரிந்துகொண்டு இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த நாய் நினைத்தால் ஒரு இடத்தில் காரணமில்லாமல் நின்று கொண்டு இருக்கும். நின்றுகொண்டிருந்த அது திடீரென்று எவ்வித நோக்கமில்லாமல் சிறிது தூரம் ஓடிச்சென்று திரும்பி ஓடி வந்த பாதையையே திரும்பிப் பார்த்து நிற்கும். அது அவ்வாறு ஓடாமல் ஓர் இடத்தில் முடங்கிக்கூடப் படுத்துக்கொள்ளும். அந்த நாயின் செயல்களுக்கு எந்தவிதமான இலக்கு நோக்கம் காரணங்களோ இருப்பது இல்லை. நாய் என்ற அந்த விலங்குக்கு இலட்சியம், இலக்கு சிந்தனை என்றால் என்ன என்பதுகூட தெரியாது.

அதனால்தான் எந்தவித குறிக்கோளும் இலட்சியம் சிந்தனை இல்லாத மனிதனை உலகில் மிருகம் போன்றவன் என்று கருதப்படு கிறான். நாயைப் போன்றுதான் உலகில் உள்ள மற்ற விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங் களுக்கும் மனிதனைப்போல் எந்தவித இலக்கு லட்சியம், சிந்தனை காரண காரியம் போன்றவை இருப்பது இல்லை. மனிதனைத் தவிர உல கில் வாழும் மற்ற உயிரினங்களுக்கு அதன் செயல்களுக்கு காரணம் காரி யங்களும் எதுவும் இருப்பது இல்லை.

பொதுவாக மனிதன்ஒரு செயல் செய்யும்போதுஅதற்கு ஏதாவது ஒரு காரண காரியம் உறுதியாக இருக்கும். சிந்தித்துப் பார்த்தால் எந்தவிதக் காரணமும் காரியமும் இல்லாமல் மனிதனுடைய செயல்பாடுகள் எதுவும் இருப்பதில்லை. அவனுக்கு காரணம் எதுவுமே இல்லாவிட்டாலும் ஒரு பொழுதுப்போக்குக்காக அந்தச் செயலைச் செய்தேன், 'நடந்தேன்' 'ஓடினேன்' 'படித்தேன்' என்று அவன் ஏதாவது ஒரு காரண காரியத்தினைக் கூறுவான். மனிதனுக்கு மட்டும் இதைப்போன்று காரணம் காரியம் இருக்கும். ஆனால் விலங்குகள் பறவைகள் போன்ற உயிரினங்களுக்கு இதுபோன்று காரணம் காரியம் இருப்பதில்லை. மனிதனைத் தவிர விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்களுக்கு உண்பது, நினைத்த இடத்தில் உறங்குவது போன்ற செயல்பாடுகள்தான் இருக்கும். அவைகளுக்கு உண்பது உறங்குவது தவிர வேறு சிறப்பான செயல்பாடுகள் ஏதும் இருப்பதில்லை.



உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்குள் ஒரு இலக்கு அல்லது இலட்சியம் இருக்கவேண்டும். அது உயர்ந்த லட்சியமாக அல்லது தாழ்ந்த லட்சிய மாகக்கூட இருக்கலாம். ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் அவனையும் அறியாமல் மனதுக்குள் ஏதாவது ஒரு குறிக்கோள் இலட்சியம் இருக்கும், இருந்து கொண்டுதான் இருக்கும். 'உலகில் உள்ள விலங்குகள் பறவைகள் போன்ற உயிரினங்களைப் போன்று மனிதனும் ஒரு இலட்சியம் இல்லாமல் இலக்குகள் இல்லாமல் இருக்கலாமே, விலங்குகள் பறவைகள் போன்று சுதந்திரமாக சுற்றித் திரியலாமே' என்று மக்களில் சிலர் நினைக்கலாம். ஆனால் இலட்சியம் குறிக் கோள் இல்லாத மனிதர்களை மனிதர்களே இல்லையென்று நமது சாஸ்திரங்கள், வேதங்கள், இதிகாசங்கள் கூறுகிறது.

நமது பேச்சு வழக்கில் ஒருவரைப் பார்த்து 'இங்கு எதற்கு வந்தீர்கள்' என்று கேட்டால் 'சும்மா உங்களைப் பார்க்க வந்தேன்' என்று பதில் கூறுவான். அதில் 'பார்ப்பது' என்ற நோக்கம், காரியம் அவனை அறியாமல் அவனுக்குள் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். ஒருவன் புத்தகம் படித்துக் கொண்டிருக்கும்போது என்ன படித்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டால் 'சும்மா பொழுது போகவில்லை அதான் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேன்' என்று கூறுவான். இதில் 'படிப்பது' என்ற நோக்கம் காரியம் அவனை அறியாமல் அவனுக்குள் இலட்சியமாக அப்போது இருந்திருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம். மனிதனுடைய சிந்தனை, செயல்கள் உயர்வாக இருக்கும்போது அவன் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்.

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
கோட்டக் கலால் அலுவலர்
(பணிநிறைவு)
கைபேசி: 9894043308









# கேரளாவில் தெய்வமாக வழிபடும் ப்ரஹ்மராக்ஷஷர்

மக்களுக்கும், உயிரினங்களுக்கும் மிகவும் கெடுதல் புரிபவர்களை ராக்ஷஷர் என்று கூறுவோம், அந்த வகையில் ராக்ஷஷர் என்ற பெயர் கொண்ட அனைத்தையும் ஒருவித அச்சம் நிறைந்த கெட்ட கண்ணோட்டத்துடன்தான் பார்ப்போம். ஆனால் ராக்ஷஷர் என்ற வார்த்தைக்க முன்பு பிரம்ம என்று சேர்த்து 'பிரம்மராக்ஷஷர்' என்று கூறும் போது நாம் அவ்வளவாக பயப்படத் தேவையில்லை.

'பிரம்மராக்ஷஷர்' என அழைக்கப்படும் இவர்கள், துர் பிசாசு அல்ல. பிராமண குளத்தில் பிறந்து வேதங்கள் கற்றுணர்ந்து வறுமையாலும், சில சாபக்கேடுகளாலும் தற்கொலை செய்து கொண்டும், ஸ்தூல ஆத்மாவாக உலவுபவர்களை 'பிரம்மராக்ஷஷர்' என்று அழைக்கப்படுவார்கள்.

இவர்கள் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் உதவிகள் புரிபவர்களாகவே திகழ்வார்கள். இவர்களை நம்பும் மக்களையும், அவர்களின் கோரிக்கையையும் நிறைவேற்றிவைக்கும் சக்தி பெற்றவர்கள் இவர்கள். இவர்களை ஒருசில தீய சக்திகள், ஒருசில மாந்திரிக விஷயங்களுக்கு தவறாக பயன்படுத்தியதால், மக்கள் மத்தியில் இவர்களை பயம் கலந்த கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டிய நிலை வந்தது.

ஆனாலும் கேரள மாநிலத்தில் சக்தி வழிபாட்டிற்கு முக்கியத்துவம் தரும் ஆலயங்களில் வெளிப்பிரகாரங்களில்'பிரம்மராக்ஷஷர்'களுக்கு தனியாக சன்னதிகள் இருக்கும். தேவிக்கு படைத்த நிவேதனத்தை இவருக்கும் படைப்பர். நேந்திரம் பழத்தின் பிரியர் இவர். வேறு சில கிரந்தங்களில் இருந்து நாம் புரிந்து கொண்டது என்னவெனில், மெத்த படித்து, அதனால் கர்வம் கொண்டு எவரையும் மதியாது இழிவு செய்து, வெறி செயல்களில் ஈடுபடும் குணமே 'பிரம்மராக்ஷஷம்' என்பதாகும். மிகுந்த தடைகள் மற்றும் கடவுள் நமக்கு அருள்வதில்லை என்ற நினைப்பு கொண்டோர், கேரளாவில் உள்ள ஏதேனும் பகவதி கோவில் சென்று, ப்ரஹ்மராக்ஷஷருக்கு விசேஷ பூஜைகள் செய்து, பின் பகவதியை வழிபட்டு திரும்புகின்றனர். இதனால் அவர்களின் பிரச்சனைகள் எளிதாக தீர்ந்துவிடுவதாக கூறுகின்றனர். தமிழகத்தைப் பொறுத்தவரை 'பிரம்மராக்ஷஷர்' வழிபாடு என்பது மக்கள் மத்தியில் கிடையாது.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

சந்தா இல்லை

நன்கொடை இல்லை

அடுத்த இதழ

# 100வது இதழாக வெளிவருகிறது

உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன்,
தரத்திலும், வடிவமைப்பிலும்

## நம்பர் 1 இணைய இதழ்

ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் மாதம்
இரண்டு இ-புத்தகமாக வெளிவரும் நமது இதழின்

**100வது இதழ் 100 பக்கங்களுடன்**

இதுவரை வெளி வந்த முக்கிய
ஆன்மிக தகவல்களுடன் பொக்கிஷமாக
வெளிவருகிறது...

## பாதுகாக்க வேண்டிய பொக்கிஷத்தை விரைவில் எதிர்பாருங்கள்....

www.aanmeegamalar.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து படிக்கலாம்.